Issue : 18 | March 2017

# திசைமானி

ஒன்று கூடிய பயணம்



# March Ahead

Perspectives :
துணை புரிவோம் தோழமையுடன்

Event Updates :
Teaching and Learning English with Dr. Anandan

Activity Ideas :
Science Festival

Teacher diaries :
கற்றல் திருவிழா

Azim Premji Foundation

# Teachers' Resource Centre - New Arrivals




PRESCHOOL LEARNING KIT

This DVD has everything that you need to develop and nurture the academic and creative development of your Toddlers and Preschoolers. Preschool Learning Kit comprises 16 chapters- Alphabets, Numbers, Fruits, Vegetable, Animals, Birds, Flowers, Household items, Modes of transportation and many more




MINDFUL GAMES : includes 60 fun activities, sharing mindfulness and meditation with children, teens, and families. By Susan Kaiser Greenland

Mindful play is a great way for kids to develop focusing skills while learning to regulate their emotions and respond to any situation calmly, with kindness and compassion. Here are sixty simple and accessible games that can bring mindfulness into your daily routine. These delightful games, developed and tested over many years of working with children and their caregivers, are designed for kids, but they can be just as fun and transformative for adults




MATHEMATICS FORMATIVE ASSESSMENT : 75 practical strategies for linking assessment, instruction, and learning. By Page Keeley

This book provides 75 formative assessment strategies and shows teachers how to use them to inform instructional planning and better meet the needs of all students. It also gives important guidance with each technique, including usage tips and caveats, implementation examples, and suggested modifications. With practical strategies that are relevant for all grades and topic areas, this book provides the tools to transform teaching and learning in your classroom




RUBBER vs. GLASS by Lawrence F. Lowery

This book is part of the 'I wonder why book' series, written to ignite the curiosity of children in grades K-6 while encouraging them to become avid readers. These books explore the marvels of light, color, machines, sound, and other phenomena related to physical science. Included in each volume is a parent/teacher handbook with coordinating activities.




THE MIND MAP BOOK : how to use radian thinking to maximize your brain's untapped potential. by Tony Buzan & Barry Buzan

This book offers exciting new ways of using and improving memory, concentration, and creativity in planning and structuring thought on all levels, in order to accelerate the ability to learn, remember, and record information. Featuring a range of stimulating exercises and a lavish collection of full-colour photographs and original Mind Maps that illustrate the technique, it shows you precisely how to mirror and magnify your brain's pattern of perception and association in the way you learn, think, and create



**டார்வின் ஸ்கூல் - இரா. நடராசன்**

ரோச் பீட்டார் என்கிற சிறுவனின் மூளைக்குள் விலங்குகளின் மொழியை பிரிந்து கொள்ளும் மைக்ரோசிப் ஒன்றை அவன் சிறுவனாக இருக்குபோதே பொறுத்திவிடுகிறார் அவனது அப்பா. இதனால் அவனுக்கு எல்லா விலங்கு இனங்களின் மொழியும் புரிகிறது. இந்த நிலையில் காட்டுக்குள் செயல்படும் டார்வின் ஸ்கூல் பற்றி அவனுக்குத் தெரியவருகிறது. அந்தப் பயணத்தில் டார்வினின் பரிணாமக் கோட்பாடு, இயற்கைத் தேர்வுக் கோட்பாடு என கதை சொல்லும் சுவாரஸ்யத்துடன் விவரிக்கப்படுகிறது.



**கடவுளை பார்த்தவனின் கதை - லியோ டால் ஸ்டாய்**

கடவுளைப் பார்த்த ஒருவனின் கதை, எந்தக் கடவுளை? யார்கடவுள் ? எது கடவுள் ? உலக புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் இதற்குச் சொன்ன பதில் என்ன? எளிய நடையில் தமிழில் தருகிறார் எழுத்தளார் பாலு சத்யா



**பூமியின் வடிவத்தைக் கண்டறிந்தது எப்படி - தமிழில் நா. முகம்மது செரீபு**

பூமியின் வடிவம் எத்தகையது ? இது ஒரு விசித்திரமான கேள்வி. உண்மையில் பூமி இலேசாகச் சரியற்ற கோள வடிவானதே. இதை எப்படி மக்கள் கண்டுபிடித்தார்கள் என்பது மிகவும் ஆர்வமூட்டக் கூடிய கதையாகும் இந்நூல் அதைப் பற்றித்தான் கூறுகிறது.

# தலையங்கம்

மகளிர் தின வாழ்த்துக்கள்.

மாணவர்களிடம் சமுதாய சமநிலைப்பற்றி உரையாட, சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்படும் மார்ச் 8ஆம் தேதி ஒரு சிறந்த வாய்ப்பு. இந்த இதழோடு இணைக்கப்பட்டுள்ள பெண்களை ஊக்கப்படுத்தும் கதைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கதைகள் சொல்லலாம், படங்கள் திரையிடலாம், நாடகங்கள் அரங்கேற்றலாம் மற்றும் வகுப்புகளில் கலந்துரையாடலாம்.

சுகுமார் அவர்கள் மத்திய மனிதவள அமைச்சகம் வளரிளம் பருவக்கல்விக்காக வெளியிட்டுள்ள 'சாத்தியா' திட்டம் பற்றிய விமர்சனம் எழுதியுள்ளார். இந்த திட்டத்தில் வளரிளம் பருவத்தில் ஏற்படும் உடல் மற்றும் மனரீதியான மாற்றங்கள், தேவையான ஊட்டசத்து, ஆரோக்கியமான உளப்பகுப்பாய்வினை, பாலின வன்முறை, பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் ஆகியவற்றைப்பற்றி விவாதிக்க தேவையான செயல்திட்டங்கள் மற்றும் ஆய்வறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

சமீபகாலமாக ஆசிரியர் வள மையத்தில் புத்தகங்கள் மற்றும் படங்களைப் பற்றிய பல சுவாரசியமான கலந்துரையாடல்கள் நடந்தன. ரவிசங்கர், சாந்தகுமாரி, கார்த்திகேயன், கருணாநிதி ஆகியோர் 'எங்களை ஏன் டீச்சர் பெயிலாக்கினீங்க', 'ஒவ்வொரு குழந்தையையும் நேசிப்போம்', 'காத்வே நகரின் அரசி' மற்றும் கடிதம் பற்றிய நடந்த கலந்துரையாடல்களைப் பகிர்ந்துள்ளனர்.

ஆசிரியர்கள் நாட்குறிப்பு பகுதியில் பள்ளிகளில் நடத்தப்பட்ட சர்வதேச தாய்மொழி தினம், குழந்தைகள் பாராளமன்றம், யோகா பயிற்சி, பள்ளிப்பேனா நண்பர்கள் செயல்திட்டம் ஆகிய நிகழ்ச்சிகளைப் பற்றிய தங்கள் அனுபவங்களை ஆசிரியர்கள் பகிர்ந்துள்ளனர்.

கடந்த வருடங்களைப் போல, இந்த வருடமும் மேடையில் திசைமானி - வருடாந்தர கல்வியாளர்கள் சங்கமத்தொடு நிறைவு செய்யலாம். அதற்கு நம்மை தயார்ப்படுத்திக்கொள்ளும் விதமாக, ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களுக்கான எழுத்து பட்டறை நடத்தப்படும். நாம் அனைவரும் ஒன்றுகூடி நமது அனுபவங்களை பகிர்ந்து, நமது உற்சாகத்தைப் புதுப்பிப்போம்.

அடுத்த இதழில் சந்திக்கும் வரை,
ஆனந்தமாக வாசிப்போம்! ஆழ்ந்த புரிதலுடன் கற்பிப்போம்!

திசைமானிக் குழு

# உள்ளடக்கம்


**கண்ணோட்டங்கள்**

இப்பகுதியில் கல்வியின் நோக்கங்கள் மற்றும் சமூகத்துடன் அதன் தொடர்பு பற்றிய விவாதங்கள்,குழந்தைகள் எவ்வாறு கற்கின்றனர் மற்றும் அதில் ஆசிரியரின் பங்கு பற்றி பகிர்ந்துள்ளனர்

வளரிளம் பருவமாற்ற புரிதலுக்கு தோழமையுடன் துணை புரிவோம் 6

எங்களை ஏன் டீச்சர் பெயில் ஆக்குனீங்க- ஒரு புத்தக ஆய்வு 9

காத்வே நகரின் அரசி - திரையிடலும் கலந்துரையாடலும் 12

குறும்படங்கள் - ஒரு பார்வை 14

ஒவ்வொரு குழந்தையையும் நேசிப்போம்- ஒரு புத்தக ஆய்வு 17

**நிகழ்வுகள்**

இப்பகுதியில் கடந்த இரண்டு மாதங்களில் நடந்த ஆசிரியர் விவாதங்கள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் களப்பயணங்கள் பற்றிய சிறு விளக்கங்கள் உள்ளன.

வளர் இளம் பருவ மாற்றம் - ஒரு புரிதல் 20

அறிவியல் வகுப்பறயில் ஆராய்ச்சி நோக்கிலான கற்பித்தல் 23

தொடக்கப்பள்ளிகளில் கற்றல் திருவிழா திட்டமிடல் - ஒரு கலந்துரையாடல் 26

தாய்மொழி தினத் திட்டமிடல் - ஒரு கலந்துரையாடல் 29

ஆங்கிலத்தை முழுமையான முறையில் கற்பித்தலும் கற்றலும் - சி.கே.ஆனந்தனின் பயிலரங்கம் 31

திரு.அனில் ஸ்வரூபுடன் ஒரு சந்திப்பு - மனிதவள மேம்பாட்டுத்துறை செயலாளர், மத்திய அரசு 34

தொடக்க கல்வியில் கணிதம்- எண்ணறிவு - மத்திய அரசின் படித்த இந்தியா வளர்ந்த இந்தியா திட்டம். 36

**பள்ளிச் நிகழ்வுகள்-தொகுப்பு** 38

இப்பகுதியில் அரசு பள்ளிகளில் நடந்த நிகழ்வுகள் பற்றிய புகைப்பட தொகுப்பு அமைந்துள்ளது.

**அறிவியல் திருவிழா** 40

**செயல்பாட்டு யோசனைகள்**

இப்பகுதியில் வரவிருக்கும் பாடங்களுக்கான செயல்பாடுகள், செயல் திட்டங்கள் மற்றும் வளங்களை பகிர்ந்துள்ளனர்

உயிரிகள் எவ்வாறு நகர்கின்றன? , பாலைவனத்தின் கப்பல் 41

தாயகமும் அயல்நாடும் 46

எண்கள் 51 முதல் 100 வரை 48

பணம் 52

பெண்கள் தினக் கொண்டாட்டம் 55

**ஆசிரியர் நாட்குறிப்பு**

இப்பகுதியில் ஆசிரியர் அனுபவங்களிலிருந்து வகுப்பறையில் கற்பித்தல், குழந்தைகளுடன் உரையாடல் மற்றும் ஆசிரியர் பிரதிபலிப்புகள் பகிர்ந்துள்ளனர்.

பள்ளியில் யோகா பயிற்சி 56

பள்ளியில் யோகா 58

பாவேந்தர் தமிழ் மன்றம் 60

பள்ளித் தூய்மை பணியில் பெற்றோர்களின் பங்கு 62

கற்றல் திருவிழா 63

உலகத் தாய்மொழி தின கொண்டாட்டம் 65

உலக தாய் மொழி தினம் 67

பேனா நண்பர்கள் 68

களப்பயணம் செல்வோம் 71

குழந்தைகள் பாராளுமன்றம் - பாலகர் பஞ்சாயத்து 75

தஞ்சையின் கோயில்கள் - ஒரு களப்பயணம் 77

## தலைமை ஆசிரியர் நாட்குறிப்பு

இப்பகுதியில் பள்ளி தலைவர்களின் அனுபவங்கள் மற்றும் பிரதிபலிப்புகள் - மாணவர் கற்றல், பள்ளி நிர்வாகம், குழு வேலை மற்றும் சமூக உறவுகளை முன்னிருந்து நடத்துவது பற்றி பகிர்ந்துள்ளனர்

ஒரு தலைமை ஆசிரியரின் அனுபவ பகிர்வு 81

# Editorial

Happy Women's Day!

March 8 is celebrated as International Women's Day and is a great occasion to discuss the concept of equality with our students. This issue carries with it stories of inspiring women in history that can be used for story readings, movie screenings, dramatized performances and classroom discussions.

Sugumar has reviewed the resource kit, 'Saathiya' released by the Ministry of Human Resource Development for adolescent education. This kit carries activities and case studies for discussing topics like the physical and mental changes during adolescence, nutrition, healthy interpersonal relations, gender and violence and sexual and reproductive health.

There have been many interesting discussions at the Teacher Resource Centers around books and movies. Ravishankar, Sandacoumary, Karthikeyan and Karunanithi have shared the summary of the discussions on 'Letter to a Teacher', 'Loving Every Child', 'Queen of Katwe' and 'Postman'.

The Teachers' Diary section carries reflections from teachers on organizing various events like International Mother tongue Day, Children's Parliament, Yoga training, School Pen friends project and exposure visits.

Like every year, we will be closing this year with Medayil Thisaimaani – the Annual Educators' conference. In the run up to the preparation for the event, we will be conducting a series of writing workshops for teachers and head teachers. Let us come together to share our experiences and renew our inspiration.

Till next time,
Happy Reading! Happy Teaching!

Team Thisaimaani

# Table of Contents

## Perspectives

Discussions on the aims of education, its connections with society, how children learn and the role of a teacher.


Let us support friendly - To fortify Adolscence 6

A letter to the teacher- A book review 9

Queen of Katwe - Screening and Review 12

Short Film a review 14

Loving Every Child - A book review 17


## Event updates

Briefings from teacher discussions, workshops and exposure visits in the last two months.


Undersatanding Adolescence 20

Bringing inquiry-based science teaching to the classroom 23

Planning learning festivals in primary schools 26

Language day celebration - A Planning Discussion 29

Teaching and Learning English in a Holistic way – Dr. Anandan's Workshop 31

A visit by MHRD Secretary - Mr.Anil Swarup 34

Early mathematics: Numeracy - Padhe Bharath badhe baharath(PBBB) 36



## School Gallery 38


Photo updates from events that happened in government schools Events at School

## Activity Ideas

Activities, projects and resources for upcoming lessons


Science Festival 40

How creatures move, Ship of the Desert 41

Home and abroad 46

Numbers 51-100 48

Money 52

Women's day celebration 55


## Teacher Diaries

Experiences from classroom teaching, dialogue with children and teachers' reflections


Yoga training for teachers and students, 56

Yoga training for teachers and students 58

Pavendhar Thamizh Mandram 60

Parents role in maintaining a clean School 62

Learning festival 63

World Mother language day at Kodathur 65

World Mother language day at Vaduvakuppam 67

Pen pal project (process and reflections) 68

Field visit experiences – Arikamedu, bharadiyar palkalaikoodam 71

Children's Parliament- Bal panchayat 75

Exploring temples in and around Thanjavur – a field visit 77


## Head Teacher Diaries

Experiences and reflections from school heads – in leading student learning, school administration, team work and community relations.


Experience of a Head teacher - A sharing 81

Perspectives

# வளரிளம் பருவமாற்ற புரிதலுக்கு தோழமையுடன் துணை புரிவோம்

வளரிளம் பருவம் என்பது குழந்தைகளின் வாழ்க்கையில் முக்கியமான, மென்மையான, உறுதியான ஒரு கட்டமாகும். இக்காலக்கட்டத்தில் அவர்களுக்கு பெரியோர்களின் துணையும் கவனமும் அதிக அளவில் தேவைப்படுகிறது. பொதுவாக அவர்களுக்கு உடலளவிலும் மனதளவிலும் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருப்பதில்லை. அவர்களுக்குள் தோன்றும் இம்மாற்றங்கள் உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் நிகழும் இயற்கையான ஒரு செயல் தான் என்பதை எடுத்துரைத்து சரியான முறையில் வழிகாட்டுவது அவசியமாகிறது.

இந்த வயதில் இயற்கையாக ஏற்படும் உடல் மாற்றங்கள், காதல் உணர்வு, திருமணம் மற்றும் உறவுகள் தொடர்பான குழந்தைகளின் சந்தேகங்களைப் பற்றி பெரியோர்களுடனோ, பெற்றோர்களுடனோ ஆசிரியர்களுடனோ உரையாட இந்நாளில் சரியான வாய்ப்புகள் இல்லை. ஆனால் குழந்தைகளின் இக்குழப்பங்களைக் வெளிப்படையாகப் பேசி அவர்களுக்கு புரிதலை வலுவாக்க வேண்டியது அவசியம்.

மாணவர்கள் வளரிளம் பருவத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விவாதிக்க ஏதுவாக இந்திய அரசு ‘சாத்தியா’ என்ற ஒரு கல்வித்திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளைச் சக மாணவர்களோடு உரையாட ஏற்ற வகையில் கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் பாலியல், சுய மற்றும் இனவிருத்தி சுகாதாரம், ஆரோக்கியமான வன்முறையில்ல வாழ்க்கை போன்றவற்றைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளும் அவற்றை விவாதிக்கத் தேவையான கேள்விகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு அரசு உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் சுகுமாறன் அவர்கள் தனது கருத்துக்களை இக்கட்டுரையின் வாயிலாக நம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

**ஆய்வறிக்கை** 1

சரிதா ஒரு மகிழ்ச்சியான பதின்மூன்று வயது சிறுமி. அவளுக்கு பதினைந்து மற்றும் பன்னிரண்டு வயதில் இரு சகோதரர்கள் உள்ளனர். அவள் பள்ளியில் அனைவருக்கும் மிகவும் அறிமுகமானவள். அவள் கபடி விளயாடும்போது மற்ற மாணவர்கள் கூட இவளோடு போட்டியிட தயங்குவார்கள். அவள் கபடி, கபடி, கபடி என்று எதிரணியை மூச்சு விடாமல் ஆர்வத்துடன் விளையாடுவாள். இதனால் மற்ற விளையாட்டு வீரர்கள் இவளின் அணியில் சேர விரும்புவார்கள். ஆனால் சில நாட்களாக, அவளுடைய பாட்டி அவளை விளையாட அனுமதிக்கவில்லை. பாட்டி சரிதா அம்மாவிடம் ஏன் உன் மகள் வெளியில் சுற்றித் திரிகிறாள்? மெதுவாக செல்லமாட்டாளா? என்றும், அவளுக்கு துப்பட்டாவுடன் கூடிய சுடிதாரையே அணிய கூறினார். ஒரு மாலைப் பொழுதில், சரிதா நண்பர்களுடன் விளையாடக் கூடாது. அன்று இரவிற்கான உணவு சமைக்க வேண்டும். மேலும் பாட்டியைக் கவனித்துக் கொள்ளுமாறு தாய் கூறினார். சரிதா மறுத்தபோது, அவளின் தாய், அவளைப் பக்கத்து வீட்டிற்கு ஓய்வு நேரத்தில் மட்டும் செல்லுமாறு கூறினார். அப்பொழுதும் தன் தந்தைக்கு கம்பளிச்சட்டைத் தைக்குமாறும் கூறினார். ஆனால், சரிதாவின் சகோதரர்களுக்கு எந்த ஒரு வீட்டு வேலையும் இல்லை. மேலும் அவர்கள் விருப்பம் போல் நண்பர்களுடன் வெளியில் ஓய்வு நேரத்தில் செல்லலாம். சரிதாவிற்கு ஒரே கவலையும் குழப்பமும். சரிதா ஒரு கண்ணாடியின் முன்பு நின்று கொண்டு நான் வேறுபட்டவளா? எவ்வாறு நின்றாள் வேறுபட்டவள்?

**எனது கருத்து**

பொதுவாகக் கபடி மட்டுமல்ல வேறு எந்த ஒரு விளையாட்டாக இருந்தாலும் வயதான பாட்டிகள் பேத்திகளை ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு வெளியில் சென்று விளையாட விடுவதில்லை. காரணம் அவர்கள் பூப்பெய்தும் காலத்தில் இருப்பதால்.

மேலும் கபடி ஆண்கள் விளையாடும் விளையாட்டு என்ற ஒரு கருத்து உள்ளது. கபடி பெண்களுக்குப் பொருத்தமற்றது என்று கருதி, அவ்விளையாட்டை விளையாடத் தடைவிதிக்கும்படி சரிதாவின் அம்மாவிடம் கூறுகிறார் பாட்டி.

பொதுவாகப் பூப்பெய்தும் பருவத்தில் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும் என்பதே பாட்டிகளின் கருத்து. மேலும் உடை விஜயத்தில் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சரிதாவின் பாட்டி சல்வார்கமிஸ் அணியச் சொல்கிறாள்.

பெண்கள் விண்வெளி பயணத்தை மேற்கொள்ளும் காலத்தில் நாம் இருக்கின்றோம். மேலும் பல பெண்கள் விளையாட்டுகளில் சாதிப்பதையும் பார்க்கிறோம். இக்காலக்கட்டத்தில் பெண்ணுரிமையைத் தடுக்கும் பாட்டி சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுதான்.

இந்த நவீன உலகத்தில் பெண்கள் நவீன உடைகளை உடுத்துகின்றனர். ஆடைக்கட்டுப்பாடு கலாச்சாரத்திற்கு உகந்ததாக இருக்கலாம்; ஆனால் நடைமுறைக்கு அல்ல.

இவ்வகையாக கட்டுப்பாடுகள், சரிதாவை தான் பெண்ணாகப் பிறக்காமல் ஆணாகப் பிறந்திருக்கலாமே என்று எண்ணத் தூண்டும். தன் சுதந்திரம் பறிபோகிவிட்டதே என வருந்துவாள். தன்னைச் சார்ந்தவர்களிடம் கோபமும் வெறுப்பும் உண்டாகும்.

பூப்பெய்தலுக்குப் பின் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் பெண்களுக்குப் பிடிப்பதில்லை. தனது தந்தை சகோதரர்களிடம் கூட நெருங்கி முன்புபோல் விளையாட முடியாத சூழலை வெறுப்பார்கள். இவைமட்டுமின்றி, சரிதா தன் தாய் மீதும் பாட்டி மீதும் வெறுப்புற்று இருந்தாள்.

இவற்றைத் தவிர்க்க சரிதா பெரியோர்களிடமும் தனது ஒத்த சக வயதுடைய ஏற்கனவே பூப்பெய்திய பெண்களுடனும் பேசுவது அவசியமாகிறது. இது உணர்வு பூர்வமான விஷயம் என்பதால் கவனமாக இருப்பது முக்கியம்.

**ஆய்வறிக்கை 2**

திலீப் மற்றும் ஜாகீர் இருவரும் நெருக்கமான நண்பர்கள். அவர்கள் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறார்கள். இருவரும் ஒரே வயதுடையவர்கள். ஆனால், கடந்த ஒரு வருடத்தில் ஜாகீர் திலீப்பைவிட உயரமாகவும், சிறு மீசை அரும்புகளுடனும் இருக்கிறான். திலீபின் உயரத்தைப் பார்த்து வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் கேளி செய்தார்கள். இதனால் திலீப் கவலையுடனும், நண்பர்களுடன் வெளியில் செல்வதையும் தவிர்த்தான். ஜாகிர், திலீப்பிற்கு ஆறுதல் கூறியும், அவனுடைய கவலைகளைப் பகிர்ந்துகொண்டான். மேலும், ஜாகீரும் தனக்கு, கனத்த குரலும், மீசை அரும்பும் உள்ளதால் தானும், சிரமமாக உணர்வதாகவும், திலீப்பைப் போலவே தானும் உணர்வதாகவும் கூறினான்.

**எனது கருத்து**

ஜாகிர் மற்றும் உசேன் இரண்டு பேருக்குமே வளர்பருவ மாற்றம் தான் ஏற்படுகிறது. இம்மாற்றம் நபருக்கு நபர் மாறுபடும். இம்மாற்றம் நெருங்கிய நண்பருக்குள் ஒரு இடைவெளியைக் கண்டிப்பாக ஏற்படுத்தும்.

உயரமாக வளர்வது, மீசை, தாடி துளிர்ப்பது போன்றவை இவ்வயதில் உள்ளவர்களுக்கு நிச்சயமாக ஒரு பிரச்சனையாகத் தான் இருக்கும். காரணம் தனது ஒத்த வயதுடைய ஒருவனுக்கு ஒரு ஆண் மகனுக்கான அடையாளங்கள் தெரியும்போது தனக்கு அவ்வாறு வளர்ச்சி இல்லையே என்ற வருத்தம் ஏற்படும். இது பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும்.

நிச்சயமாக ஜாகிர் தனது நண்பன் சிறு பிள்ளைப்போல் இருப்பதை பார்க்கும்போது தனக்கு வயதாகிவிட்டதோ என்கிற எண்ணம் தோன்றும். மேலும் தனது குரல் பெரிய ஆண்மகன் போல மாறியதாலும் முகத்தில் தாடி, மீசை வேகமாக

வளர்த்து வருவதாலும் அவனுக்குக் குழப்பம் தோன்றும். ஒவ்வொரு முறையும் அதனை வழித்து விடும்போது தனக்கு ஏன் இவ்வாறு வளர்ந்தது என்ற வெறுப்பும் சிறிது காலத்திலேயே வந்து விடும்.

ஒருவரின் வளர்பருவ மாற்றத்தினைக் கண்டு சிரிப்பது முட்டாள் தனமே. ஏனென்றால் இது அனைவருக்கும் நிகழும் உடலில் ஏற்படும் மாற்றமே.

திலீப் வயதுக்குறிய மாற்றம் வரவில்லை என்பதால் கண்டிப்பாக இதைப்பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்க முயற்சி செய்வான். ஒரு வேளை தனக்கு சகோதரன் இருந்தால் அவனிடம் கேட்க முயற்சிப்பான். பெரிய வயது வித்தியாசம் உள்ளவருடன் நிச்சயம் கேட்கமாட்டான்.

வளர்பருவ மாற்றத்தைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் பெண்பிள்ளைகளுக்கு மட்டுமல்ல ஆண்பிள்ளைகளுக்கும் உண்டு.



**இ. சுகுமாறன்,**
அ.மே.ப. ஆலங்குப்பம்,

# எங்களை ஏன் டீச்சர் பெயிலாக்கினீங்க?

(குறிப்பு: இங்கு புத்தகம் பற்றிய எனது பார்வையும் அதையொட்டி உருவான கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது.)

இப்புத்தகம் ஆங்கிலத்திலிருந்து ஷாஜகான் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இத்தாலி நாட்டில் உள்ள கல்வி அமைப்பினால் (பள்ளியில்) பெயிலாக்கப்பட்ட மாணவர்கள் ஒரு மாற்று பள்ளியின் மூலம் முன்னேற்றம் அடைந்து அவர்களுடைய பழைய ஆசிரியர்களுக்கு எழுதும் 8 கடிதங்களின் சாரம் இப்புத்தகம்.

இப்புத்தகத்தின் முகப்பில் உள்ள "உலகம் முழுவதும் ஏழைகளுக்கு எதிராக உள்ள கல்வி அமைப்பு குறித்த கோபமான விமர்சனம்" என்ற வாசகமே இப்புத்தகத்தைப் படிக்கும் ஆர்வத்தை தூண்டுவதாக அமைந்துள்ளது. இப்புத்தகத்தில் குறிப்பிடப்படும் மாற்றுப்பள்ளி "பார்பியானா" என்னும் ஒரு சிறிய குடியிருப்பு பகுதியில் 'ஃபாதர் மிலானி' என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு பள்ளி. இப்பள்ளியில் ஆசிரியர்கள் இல்லை, கரும்பலகை இல்லை, இருக்கைகள் இல்லை. முற்றிலும் வித்தியாசமான ஒரு பள்ளி.

**கடிதம்** 1 ஒரு மாணவன் அவனுடைய கூச்ச சுபாவத்தினால் பள்ளியைவிட்டு விரட்டப்படுகிறான். முதலில் அது அவனுடைய குறை என்று எண்ணிய அம்மாணவன் பிறகு ஆராய்ந்து அக்குறை பொருளாதாரத்தில் தாழ்ந்த ஒட்டுமொத்த இனத்திற்கும் உள்ளது என்று கண்டுபிடித்து அதை களைய அந்த ஆசிரியர் முயற்சி எடுக்கவில்லை என்பதை அவரது பாணியில் எடுத்துரைத்துள்ளார்.

மேலும் அவர் ஏழைகளுக்கு இரண்டாந்தரக் கல்வியே வழங்கப்படுகிறது என்று சாடுகிறார். ஒரே அறையில் 1 முதல் 5 வகுப்புகள் ஒன்றிணைத்து நடத்தப்படுவதையே அவர் அப்படி குறிப்பிடுகிறார்.

கலந்துரையாடல்: இந்த இரண்டாம்தரக் கல்வி பற்றி கலந்துரையாடல் நடந்தது. சில கிராம பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை, அதன் பள்ளி உள்கட்டமைப்பு மற்றும் குறிப்பாக இந்தியாவில் உள்ள பல்வேறு கல்வி வாரியம், பாடத் திட்டம் அதன் தேவை அல்லது இயலாமை போன்றவைப்பற்றி கலந்துரையாடினோம்.

**கடிதம்** 2 பார்பியானா பள்ளியைப் பற்றி இதில் புகழ்ந்து எழுதியுள்ளனர். அப்பள்ளியில் மாணவர்களே ஆசிரியர்கள். தவறுகளை மாணவர்களே திருத்தி கொள்கின்றனர். ஒரு பாடம் அனைத்து மாணவர்களுக்கும் புரிந்த பிறகுதான் அடுத்த பாடத்திற்குச் செல்கின்றனர்.

கலந்துரையாடல்: அனைத்து மாணவர்களுக்கும் ஒரு பாடம் புரிந்த பிறகுதான் அடுத்த பாடத்திற்கு செல்ல வேண்டும் என்பது நமது கல்வி முறைக்கு உகந்ததல்ல. அவரவர்கள் அவர்களுடைய திறமைக்கு ஏற்றவாறு முன்னேறி சென்றால்தான் அவர்களால் முன்னேற முடியும் என்பது என்னுடைய கருத்து.

**கடிதம்** 3 பார்பியானா பள்ளியில் பள்ளிக்கு வருவதை மாணவர்கள் ஒரு சுமையாக நினைப்பதில்லை. வாரத்தில் ஏழு நாட்களும் பள்ளிக்கு வருகிறார்கள். தேர்வில் காப்பி அடிப்பதில்லை. ஏனெனில் அவர்களுக்கு தோல்வி என்ற ஒரு நடைமுறையே இல்லை. கூட்டாக படிப்பது சிறந்த அரசியல். தனியாக படிப்பது சுயநலம் என்று கூறுகிறார்கள். எப்பொழுதும் முழுமையை நோக்கி ஏன் நகருகிறீர்கள் என்று கடுமையாக சாடுகிறார்.

"மொழி என்பது சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலேயே மெருகூட்டப்படுகின்ற ஒன்று. ஆனால் வசதியானவர்கள் அதில் சில முறைகளைக் கற்பித்துக் கொண்டு, அம்முறைப்படி பேச இயலாதவர்களைப் பிரித்துப்

பார்க்கின்றனர்" என்று மொழியில் உள்ள மேலாதிக்க தன்மையை போகிற போக்கில் கூறிவிட்டனர். நம்மில் சிலர் கூட வட்டார வழக்கில் பேசும் மக்களை கொஞ்சம் ஏளனமாகதான் பார்க்கிறோம்.

"நோயாளிகளை வெளியே தள்ளிவிட்டு, ஆரோக்கிய மாணவர்களைச் சேர்த்துகொள்ளும் ஒரு வினோத மருத்துவமனை" என்று பள்ளியை சாடுகிறார்கள். இது நம் நாட்டில் உள்ள பெரும்பாலான தனியார் பள்ளிகளில் நடைபெறும் ஒரு வழக்கம். கட்டுரைகளில் வெற்று வார்த்தை ஜாலங்களையும், கையெழுத்தையும் தான் மதிப்பிடுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இங்கும் பெரும்பாலான கட்டுரை போட்டிகளில் கையெழுத்துதான் முதலில் மதிப்பிடப்படுகிறது. கருத்துக்கு இரண்டாம் இடம்தான்.

கலந்துரையாடல்: கூட்டாக கற்பது அல்லது கற்று கொடுப்பது தற்போது நம் மாணவர்களிடைய குறைந்துள்ளது. காரணம் பின்தங்கிய மாணவர்கள் அவர்கள் வேகத்திற்கு ஈடுகொடுக்கமாட்டார்கள், அல்லது இவர்களால் அவர்கள் வேகத்திற்கு கற்று கொடுக்கும் பொறுமையற்று இருக்கின்றனர். ஆரோவில்லில் உள்ள ஒரு பள்ளி Rishi Valley School Method என்னும் முறையில் மாணவக்ஷீகளே மாணவர்களுக்கு கற்பிக்கிறார்கள் என்றும் விவாதிக்கப்பட்டது.

**கடிதம்** 4 "கற்றுக் கொள்வதன் தன்மை அறிந்து தேர்வுகளில் கடினப்பகுதிகள் கேட்கப்பட வேண்டும். தொடர்ந்து கடினமானவையே கேட்கப்பட்டால், உங்களுக்கு எங்களைச் சிக்க வைக்கும் மனோபாவம் இருப்பதாகத் தான் அர்த்தம். அதுவும் திட்டமிட்டுச் சிக்க வைக்கும் சூழ்ச்சி மனோபாவம்" என்று தேர்வு முறையைப் பற்றி மிகவும் காட்டமாக சாடுகிறார்கள். இது தற்போது நமது பள்ளியிலும் நடைபெறுகிறது. அதுவும் சிபிஎஸ்இ என்று கூறி மிக கடினமாக கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு பதில் தெரியாத குழந்தைகளை உபயோகமற்றவன் என்று பிரிக்கிறார்கள்.

கலந்துரையாடல்: "தற்போதைய தேர்வு முறையைப் பற்றி விவாதிக்கப்பட்டது. வேகமாகவும், அழகாகவும் எழுதும் இரு திறமைகள், வாழ்கையில் அல்லது தொழிலில் அரிதாக பயன்படும். அத்திறமைகள் தான் இன்றைய தேர்வு முறைகளில் அவசியமான திறமைகளாக நிலைபெற்றுள்ளது என்பது வேதனைக்குரிய விஜயம். அனைத்தையும் ஒரு அல்லது இரு மதிப்பெண் வினாக்களாக மாற்ற வேண்டும்" என்று விவாதிக்கப்பட்டது.

அப்படி மாற்றினால் மாணவர்களுக்கு கருத்துகளைக் கோர்வையாகவும் தொடர்புபடுத்தி எழுதும் திறனை மதிப்பிடுவது இயலாமல் போகும்" என்று விவாதிக்கப்பட்டது.

"அதனையும் மதிப்படும் வகையில் சிறிய வினாக்களை அமைக்கலாம். பெரும்பாலான நுழைவுத்தேர்வு அவ்வாறுதான் அமைக்கப்படுகிறது. மேலும் தற்போதைய தேர்வு முறையில் தேர்வுதாள் திருத்துபவரின் மனநிலையும் அவர்கள் அளிக்கும் மதிப்பெண்ணில் பிரதிபலிக்கிறது." என்று விவாதம் ஆரோக்கியமாக சென்றது. அதற்கு தொடர்பான ஒரு நகைச்சுவையான படக் காட்சியும் நினைவுக் கூறப்பட்டது.




**கடிதம்** 5 "தற்போதைய மாணக்கர்களின் இலக்கு மதிப்பெண், சான்றிதழ் மற்றும் அதையொட்டிய பொருளாதார பயன்பாடாகிவிட்டது" என்று ஆழமாக கூறுகிறார்கள். ஆசிரியர்களும் அவர்களுடைய ஆய்வாளர்களுக்காக, ஆய்வாளர்கள் அவர்களுடைய உயரதிகாரிகளுக்காக, உயரதிகாரிகள் அமைச்சர்களுக்காக என்றுதான் பள்ளியில் வேலை செய்கிறார்கள். மாணவர்களுக்காக அல்ல என்று கடுமையாக சாடுகிறார்கள். இதை நாம் இன்றும் பார்க்கிறோம். இன்றைய கல்வி முறையில் கற்று தரப்படும் கணக்கு குதர்க்க புத்திகாரர்களால்

மட்டுமே புரிந்துகொள்கிற வகையில் வெறும் சூத்திரங்களை பிரதான அல்லது முன்னிலைப் படுத்தி கற்றுதரப்படும் முறையையும் சாடுகிறார்கள்.

கலந்துரையாடல்: தற்போதைய சூழ்நிலையில் ஒருவர் சான்றிதழ் வாங்கிவிட்டால் அவன் கற்று தேர்ந்தவன் என்றாகிவிடுகிறது. ஏனெனில் வேலை கொடுக்கும் அரசும் அதைத்தான் பார்க்கிறது. அதனால்தான் என்னவோ இளைஞர்கள் தனியார் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறனை அடையாமல், வெறும் சான்றிதழ்களை மட்டும் வைத்துக்கொண்டு வேலையை தேடி அலைகிறார்கள்.

**கடிதம் 6** ஒரு பள்ளியில் 28 மாணவர்களில் 26 மாணவர்கள் பெயிலாக்கப்பட்டனர். அவர்களுடைய ஆசிரியர் முட்டாள்கள் நிரம்பிய வகுப்பிற்குக் கற்பிக்க வந்துவிட்டதாக மிகவும் வருத்தப்பட்டார். மதிப்பெண்கள், தேர்ச்சி அறிக்கைகள் மற்றும் தேர்வுகள் என அனைத்து ஆயதங்களும் ஆசிரியரிடம் இருப்பதை இம்மாணவர்கள் நம்பகத்தன்மையாக கருதவில்லை. செய்திதாள் படிக்கும் நடைமுறை இல்லாமையால் இழந்ததையும், மாற்றுப்பள்ளியில் செய்திதாளினால் நிகழ்கால அரசியல், வரலாறு என அறிந்து கொண்டதையும் குறிப்பிடுகிறார்கள். பள்ளிகள் வாழ்க்கைக்கு கொஞ் சமும் நேரடி தொடர்பு அற்றதாக கூறுகிறார்கள். ஒரு மாணவன் தொழிலாளியாக பணிபுரிகிறான். அம்மாணவன் தொழிற்சங்க ஒப்பந்தத்தை கற்று கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று வருத்தப்படுகிறான்.

இவ்வாறு அம்மாணவர்கள் அப்போதைய கல்வி முறையை விமர்சித்தும் சில யோசனைகளையும் இக்கடிதங்கள் மூலமாக ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்துகிறார்கள். பாடத்திட்டத்தைப் பற்றி கலந்துரையாடும் பாராளுமன்றத்தில் எங்களுக்கு இடம் இல்லையென்றும், ஏழைகள் அதிகாரங்களில் பங்குபெற்றால் மட்டுமே கல்வி ஏழைகளுக்கும் உடையதாகும் என்றும் ஆதங்கம் கொள்கின்றனர்.

இப்புத்தகத்தில் குற்றஞ்சாட்டப்படும் சில நடை-முறைகள் தற்போது நமது கல்வி அமைப்பில் வழக்கொழிந்து வருகிறது. உதாரணமாக "35 மார்க் எடுத்தால் பாஸ், 34 மார்க் எடுத்தால் பெயில்", "பள்ளிக்குச் சென்றடைவதற்கான வழிகள் இல்லாமை", "எட்டு மணி நேரம் செயல்படும் முழு நேரப் பள்ளி இல்லாமை", "வயதுக்கு ஏற்ற வகுப்பில் சேர்க்காமை", "பெண்கள் படிப்பு எதற்கு எனும் மனப்பான்மை", போன்ற குற்றச்சாட்டுகள் இந்தியாவில் வழக்கொழிந்து வருகிறது என்பதை சாதகமான விஷயமாக எடுத்துக்கொள்ளலாம்.

இக்கடிதங்களில் மாணவர்கள் அவர்களுடைய பார்வையிலிருந்து மட்டுமே எழுதியுள்ளனர். அது நெகிழ்வுதன்மையுள்ள ஒரு மாற்று பள்ளிக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் வேறுபட்ட பங்குதாரர்கள் உடைய நம் கல்வி அமைப்புக்கு அவற்றை செயல்படுத்துவதற்கு பெரும் முயற்சி எடுக்க வேண்டும்.



**ஜெ. இரவிசங்கர்,** தொ.ப.ஆ,
அ.தொ.ப, மேல் சாத்தமங்களம்

Perspectives

# காத்வே நகரின் அரசி - Queen of Katwe

**திரையிடலும் கலந்துரையாடலும்**

**கதைச்சுருக்கம்**:

பியானா என்னும் சிறுமி தன் அம்மா மற்றும் சகோதரர்களுடன் உகாண்டா நாட்டில் வசித்து வருகிறாள். இவர்கள் எல்லோரும் வேலை செய்தால்தான் அவர்களது வாழ்க்கை நகரும். குழந்தைகளுக்குச் சத்து உணவு கஞ்சி கொடுத்தப் பின், தன் தம்பியைப் பின் தொடர்ந்து சென்று செஸ் விளையாட சொல்லித்தரும் இடத்திற்குள் வந்தடைகிறாள் பியானா. அங்கு செஸ் விளையாட்டில் அவளை ஈடுபடுத்துகிறார் பயிற்றுனர். செஸ்ஸில் அவளது ஆர்வம், அதை பயிற்றுனர் பயிற்றுவிக்கும் முறை, குடும்பம் அதை எதிர்கொள்ளும் விதம் என்பதாக படம் நகர்கிறது. ஆசிரியரின் ஈடுபாட்டின் காரணமாகவும், உழைப்பு மற்றும் முயற்சியின் காரணமாகவும் குழந்தைகள் செஸ் விளையாட பல இடங்களுக்குப் பயணிக்கின்றனர். உலக செஸ் சாம்பியனாகிறாள் பியானா.

**கலந்துரையாடல்: (எனது கருத்தினைப் பதிவு செய்கிறேன்)**

இப்படம் பார்த்தபொழுது என்னையறியாமலே நான் என் மாணவர்களுக்கு எப்படி இருக்கவேண்டும் என்று உள்ளூர ஓடிக்கொண்டே இருந்தது. நாம் எதையெல்லாம் செய்யத் தவறிவிட்டோம் எனத் தோன்றியது. மாணவர்கள் மேல் அக்கறை கொள்வது என்பது அவர்களுக்குத் திறனைக் கற்றுக்கொடுத்தல் மட்டுமல்ல. அவர்களது சூழலைப் புரிந்துகொள்ளுதல், அவர்களது தின வாழ்வில் பங்கெடுத்தல், அவர்களது உள்ளம் உடல் விஷயங்களைப் புரிந்துகொள்ளுதல் என நீண்ட பட்டியலை உடையதாக இருக்கிறது. இதைக்கடந்து அவர்களுக்கு ஏற்ப சொல்லிக்கொடுத்தல், அவர்கள் தாங்களாகக் கற்கும் சூழலை ஏற்படுத்துதல், ஒருவருக்கொருவர் திறன்களைப் பகிர்ந்துகொள்ள ஏற்பாடு செய்தல், தேடி கற்றல் என வெவ்வேறு விதமான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறார். இப்படத்தைப் பார்த்தபொழுது வகுப்பறையில் குழந்தைகள் அவர்களுக்குள் பேசுவது, கற்றுக்கொடுப்பது எல்லாம் நினைவிற்கு வந்தது, ஆசிரியராய் நாம் கவனமாக இதுபோன்ற சூழலை ஏற்படுத்துவது பற்றி எண்ணினேன்.

மற்றபடி உகாண்டா நாடு நம் நாட்டிலிருந்து மாறுபட்டிருந்தாலும் இந்தச் செயல்பாடுகள் நமது நாட்டை ஒத்திருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்திக்கொண்டே இருந்தது. காட்சிகளில் வறுமையும் வண்ணமும் கலந்திருந்தன. காட்சிகள் அப்பெண்ணை மட்டும் காட்சிப்படுத்தாமல் சமூகத்தையே காட்டியதுபோல் இருந்தது.

என் வகுப்பறையில் இப்படத்தைக் காட்டி அவர்களுக்கும் எனக்குமான உறவை வலுப்படுத்துவதோடு நாங்கள் இணைந்து பயணிக்க வேண்டியதைப் பற்றி உரையாடல் நிகழ்த்த வேண்டும், அதன் பின் செயல்பாடுகளில் ஈடுபடவேண்டும் என யோசித்துள்ளேன்.

- படத்தின் வசனங்கள் தத்துவத்தை போதிப்பது போல் இருந்தது. குறிப்பாக ஆசிரியர் பேசும் விஷயங்கள் ஆசிரியராகிய நம்மை நோக்கியே இருப்பதுபோல் இருந்தது. உகாண்டாவின் சூழல் வேறாக இருக்கலாம், வறுமையின் தன்மை வேறாக இருக்கலாம். ஆனால் அனைத்து நிகழ்வுகளும் நம் அரசுப்பள்ளியில் நடப்பது போலவே இருந்தது. படத்தில் பேசப்பட்ட வசனங்கள் சிலதை திரும்பப் பேசிப்பார்க்க வேண்டும் போலுள்ளது. ஒரு சிலவற்றை சொல்கிறேன்.

- உனக்கு சண்டைபோடத்தெரிகிறது. உன்னால் செஸ் விளையாடமுடியும்.

- அய்யா நான் உண்மையிலேயே வெற்றி பெற்றேனா? இல்லை, நான் பாவம் என்று அவன் விட்டுக்கொடுத்துள்ளானா?. அதெப்படி நான் பள்ளிக்கூடமே போகாதவள் இவ்வளவு வெற்றி பெற முடியும்!

- 'இல்லை' முடியாது வார்த்தைகள் உங்களிடம் நிறைய இருக்கிறது. எங்கள் பிள்ளைகள் சிறப்பாக செயல்படுபவர்கள். ஒரே ஒரு 'ஆம்' உங்களிடமிருந்து எனக்குத் தேவைப்படுகிறது. எங்கள் பிள்ளைகளைப் போட்டிக்கு அனுமதிப்பது.

- சின்ன போர்வீரனுக்கு எங்கு செல்லவும் பவர் இருப்பது, இராணிக்கு இருக்கும் அதிகாரம் இதெல்லாம் செஸ் விளையாட்டில் எனக்குப் பிடித்தமானது.

- எங்கயோ போயி பரிசு வாங்கிட்டு வந்தாலும் வந்தா, அவ நட எல்லாம் மாறிப்போச்சு. இந்த வீட்டுல வாழ புடிக்கல, வேலைக்குப் போக புடிக்கல உங்களாலதான் எங்க வீட்டுக்கு இந்த நிலை, சார்.

படத்தில் வரும் இதுபோன்ற வசனங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். படத்தில் உகாண்டாவின் சூழல் நம் நாட்டின் சூழலைவிட மோசமாக இருந்தபோதும், மக்கள் சுறு சுறுப்பாகவும் தேடலோடும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இயந்திரங்கள் குறைவாக இருக்கும்பொழுது மனித செயல்பாடுகள் வியப்பாக இருக்கிறது.

அம்மா மட்டும் தனியாக இருந்து குழந்தையை வளர்க்கும்பொழுது எதிர்கொள்ளும் கஷ்டங்கள், பிரச்சனைகளைப் படம் தத்ரூபமாகக் காட்டுகிறது. குழந்தைகளை வளர்ப்பதற்கு அம்மா படும் கஷ்டங்கள், குறிப்பாக சாப்பாடு என்ற பார்வையிலிருந்து பார்க்கும்பொழுது வளரிளம் பருவத்தில் பெண்களுக்கு ஏற்படும் மாற்றத்தை அப்படியே எடுத்துக்காட்டியுள்ளது.

வாய்ப்பு ஒரு குழந்தையை எவ்வளவு தூரம் எடுத்துச் செல்கிறது என்பதாகப் பார்க்கலாம். ஒரு ஆசிரியர் மாணவர்கள்மீது அக்கறைக் கொள்ளும் பொழுது ஏற்படும் மாற்றமாகப் பார்க்கலாம். பள்ளிக்குச் செல்லவே முடியாத சூழலிலுள்ள குடும்பங்களிலும் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதாக அமைந்துள்ளது. அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் பார்க்க வேண்டிய படம் இது.





**நல். கருணாநிதி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப, பெருங்களூர்


**இரா. கார்த்திகேயன்,** தொ.ப.ஆ,
அ.தொ.ப, நரம்பை

# குறும்படங்கள் - ஒரு பார்வை

**தபால்காரர்**:

ஒரு தபால்காரர் அவ்வூரின் அனைத்து தகவல்களையும் கூறுபவராக இருந்தார். அதனால் " உன்னால்தான் இவ்வூருக்கே நல்லது நடக்கிறது" என்பார் பஞ்சாயத்து தலைவர். எவ்வளவு மைல்கள் இருந்தாலும் மிதிவண்டியில் சென்றே கடிதத்தை உரியவர்களிடம் சென்று சேர்த்த அவர்கள் அனுபவிக்கின்ற சந்தோஷத்தைப் பார்த்து மகிழ்கின்றவர் தபால்காரர். தபால்காரர் மீது தனிப்பட்ட மதிப்பும் மரியாதையும் செலுத்தினர்



அவ்வூர் மக்கள். அவரைப் பார்க்கும்போது எல்லாம் பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை தனக்கு ஏதேனும் கடிதம் வந்துள்ளதா? எனக் கேட்கத் தவறுவதில்லை. எவ்வளவு கடிதங்கள் வந்தாலும் முதலில் அவர் கடிதத்தைக் கொண்டு கொடுப்பவர் பஞ்சாயத்துத் தலைவருக்குத் தான். அவரைப் பார்க்கும்போது மக்கள் கடவுளையே நேரில் பார்க்கின்ற மாதிரியான எண்ணங்களுடன் இருந்தனர். படிப்பறிவில்லாத பாமர மக்களுக்குக் கடிதங்களைக் கொண்டு சேர்ப்பவராக மட்டுமல்லாது அவற்றைப் படித்துக் காட்டும் மேதையாகவும் திகழ்ந்தார். ஆதரவில்லாத பாட்டிக்கு பேருதவியாக இருந்தார். ஒரு தபால்காரர் முயன்றால் தொலைந்து போன உறவுகளை கடிதத்தின் மூலம் உயிர்ப்பிக்க முடியும் என்பதை நிருபித்துக் காட்டினார். நாளடைவில் அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தால் உருவான தொலைப்பேசி கண்டுப்பிடிப்பினால் கடிதப் போக்குவரத்துக் குறைய ஆரம்பித்து-விட்டது. அவ்வூருக்கு வருகின்ற கடிதங்கள் தொலைப்பேசி கட்டணக் கடிதங்களாகவே மாறிவிட்டன. இவற்றால் மனம் நொந்து தன் வேலையையும் விட்டு செல்லுகிற நிலைமைக்குத் தள்ளப்படுகிறார் தபால்காரர்.

**எனது பார்வை**:

- இப்படத்தைப் பார்க்கும்போது என்னுடைய சிறுவயது ஞாபகங்கள் நினைவுக்கு வருகிறது. ஒரு தபால்காரர் வருகின்றார் என்றால் அவரின் 'மணியோசை' சத்தம் கேட்கும். அந்தச் சத்தம் பக்கத்துத் தெருவில் எழுப்பினாலும் கேட்கும். அவ்வொலியை இப்போதைய சிறுவர்கள் அனுபவிப்பதில்லை.

- ஒரு தபால்காரரின் அடையாளங்கள் என்பவை காக்கி உடை, தொப்பி, மிதிவண்டி, பை. என் மாணவர்களுக்கு ஒரு பாடத்தில் இதைப்பற்றி கலந்துரையாடும்போது அவர்கள் கூறியவை உடை யைப்பற்றி மட்டுமே. தபால்காரரின் மற்ற அடையாளங்கள் தொலைந்து போய்விட்டன. இவற்றிற்கெல்லாம் காரணம் நவீன வளர்ச்சியே.

- நான் சிறுவயதில் பொங்கல் வாழ்த்து அட்டை, புத்தாண்டு வாழ்த்து அட்டை, பிறந்தநாள் வாழ்த்து அட்டை போன்றவற்றை எல்லாம் கடைகடையாய் ஏறி, இறங்கி வாங்கிய அனுபவங்கள் மற்றும் அவற்றை என் சக தோழர்களுக்கு அனுப்பிய அனுபவங்கள் உண்டு. ஆனால் இப்போதைய தலைமுறையினர் அவற்றில் ஆர்வம் காட்டுவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் கைப்பேசியின் வளர்ச்சி.

- நான் என்பள்ளி ஆண்டுத்தேர்வின் முடிவுகளைக் கடிதத்தின் மூலம் பெற்றிருக்கிறேன். என் ஆசிரியப்பணியின் பணி ஆணையை தபால்

மூலம் பெற்ற அனுபவம் பெரும் மகிழ்ச்சியை எனக்குள் ஏற்படுத்தியது.

- நான், என் வீட்டிற்கு வரும் கடிதங்களில் இடம் பெற்றிருக்கும்தபால்களைஉற்றுநோக்கிஇருக்கிறேன். அவற்றில் அதிகம் தலைவர்களின் படங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இன்று வருகின்ற கடிதங்களில் தபால்தலைகள் அதிகம் இடம் பெறுவதில்லை.

**கடிதாசி**

என்னதான் தகவல்தொடர்பு வளர்ச்சியால் மக்கள் சொந்தங்கள் மாறினாலும் தன்னுடைய கடிதத்தின் மூலமாக தன் முழு இன்ப துன்பங்களைக் கண்முன்னால் கொண்டுவர



முடியும் என்பதில் உறுதியாக இருந்தார் முதியவர். நவீன வளர்ச்சியில் தன் உணர்வுகளை யாருக்காகவும் மாற்றிக்கொள்ள முன்வராமல் தன்னுடைய எழுத்துகளை அனுதினமும் உயிர்பித்துக் கொண்டிருந்தார். தன் பேரப்பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்தாலும், அவர்களுடன் தொலைப்பேசியில் கூட பேச ஆசைப்படாமல், தன் எண்ணங்களை உணர்வுகளை எழுத்துக்களாகவே வெளியிடுகிறார். தன்னுடைய மத்திய அரசு பணியில் இவர் பல்வேறு விதமான கடிதங்களைப் பார்த்தவர். (துக்கம், சந்தோஷம், அன்பு, பிறப்பு, இறப்பு) ஆனால் இந்நவீன வளர்ச்சியில் அவையெல்லாம் தொலைந்து போய்விட்டதாக எண்ணினார். இளைய தலைமுறையினருக்கு அவர் கூறுவது யாதெனில் எழுத்துகள் மூலமாக மட்டுமே ஒருவன் தன் உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்த முடியும் என்கிறார்.

**எனது பார்வையில்....**

- இளைய தலைமுறையினர் எழுதுவதற்கு நேரம் ஒதுக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.
- நாம் நம் மாணவ சமுதாயங்களை இளம்பருவத்திலிருந்தே தினசரி நிகழ்வுகளை எழுதத் தூண்டுதல் வேண்டும்.
- வாழ்த்து அட்டைகளை பரிமாறிக்கொள்ள தூண்டுகோலாய் விளங்க வேண்டும்.
- எழுத்துக்களுக்கு மட்டுமே நம் உள்உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் உண்டு என்பதை உணர்த்த வேண்டும்.

**வானத்திற்கு ஒரு கடிதம்** :

தன் அப்பா சொர்க்கத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார் என நினைத்துச் சிறுவன் ஒருவன் தன் அப்பாவிற்கு தன்பள்ளி நிகழ்வுகளையும் உணர்வுகளையும் கடிதத்தின் மூலம் வெளிப்படுத்துகின்ற போது அங்கே விதத்தில் ஒரு இளம் விஞ்ஞானியை காணமுடிகிறது. அக்கடிதம் கிடைக்கப் பெற்ற மனிதர் அப்பிஞ்சுக் குழந்தையுடைய ஏக்கத்தைப் புரிந்து கொண்டு பதில் கடிதம் எழுதுகின்றார். அக்கடிதம் அவனுக்குக் கிடைக்கப் பெற்றதும் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறான். அப்பதில் கடிதத்தைப் பார்த்து அவன் தாயும் அவனுடைய ஏக்கம் ஓரளவு தீர்ந்தது என்கின்ற சந்தோஷத்தில் அவரும் பங்கு கொள்கிறார். அக்கடிதப் போக்குவரத்துத் தொடரும்.



**எனது கருத்து:**

- தொலைந்துபோன உறவுகளுடன் நாம் மீண்டும் பேச முடியும் என்பது எழுத்தால் மட்டுமே சாத்தியம்.
- அரசுப் பள்ளி மாணவர்களில் பாதிக்குப்பாதி மாணவர்கள் தன்னுடைய தாய் தந்தையை தொலைத்தவர்களாகவே இருக்கின்றனர். அவர்-

களை நாம் இப்படத்தின் வாயிலாக அவர்களுடன் பேச வேண்டும். உன் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்றால் எழுத்துகள் மூலம் அவர்களின் எண்ணங்களை குறிப்பேட்டில் எழுதப் பயிற்சி அளிக்க நல்ல வாய்ப்பாக இருக்கும் இப்படம்.

நாம் தொலைத்து விட்ட எழுத்துகள், கடிதங்கள், வாழ்த்து அட்டைகள், நம் உள் உணர்வுகள், தபால் தலைகள் சேகரித்தல், கடிதங்களை படித்துக் காட்டும் அனுபவங்கள், கடித மாதிரிகள். இவைகளை நாம் மறு உருவாக்கம் செய்யும் இடமாக நம் வகுப்பறைகளை மாற்ற இப்படங்கள் ஒரு தொடக்கப்புள்ளியாக இருக்கும்.



**கே.பத்மினி,** தொ.ப.ஆ.,
அ.தொ.ப, தட்டான்சாவடி(எஸ்.என்)

# ஒவ்வொரு குழந்தையையும் நேசிப்போம் ஒரு புத்தக ஆய்வு

**குழந்தைகள் நாளைய மனிதர்கள் அல்ல. இன்றைய மனிதர்கள்தான்.**

புத்தகம் ஒரு சிறந்த நண்பனாகும். எப்பொழுதும் நம்மை விட்டு நீங்காது நம்முடன் இருக்கும் நெருங்கிய நண்பன் புத்தகமே. நல்ல புத்தகம் நம் பிரச்சினைகளுக்குப் பதில் கூறும்; கவலையை மறக்கச் செய்யும்; தன்னம்பிக்கையை வளர்த்து வாழ்க்கைக்கு வழிகாட்டும்; சிக்கல்களுக்குகான தீர்வை மிக எளிதாகச் சொல்லி விடும். அத்தகைய புத்தகம் ஒன்றைப் படிக்க நேர்ந்தது மிக மகிழ்ச்சியாக இருந்தது.

குழந்தையைப் பற்றி எனக்குத் தெரியாதா? குழந்தைகளை நான் நேசிக்கிறேன் என்று இறுமாப்பிலிருந்த எனக்குக் குழந்தையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் இன்னும் பல உள்ளன என்ற எண்ணத்தை உண்டாக்கியது இந்தப் புத்தகம். உங்கள் குழந்தையை அறிய முயலும் முன்பு, உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் என்று எடுத்துக்காட்டி உணர்த்தி இருக்கிறார் ஆசிரியர்.

**வளர்ந்தோரின் கைப்பாவையாக குழந்தைகள்**:

பூத்துக் குலுங்கும் தோட்டத்தின் மேல் சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப்பூச்சி குழந்தை. எப்படிப்பட்ட உதாரணம்! அவளின் இறக்கைகள் நனையாமல் எவ்வாறு முறுக்கேற்றுவீர்கள் என்ற கேள்விக்குப் பதில் என்ன? குழந்தைக்கு இது வேண்டுமா? வேண்டாமா? அவள் என்ன நினைப்பாள்? என்று எதையும் நினைக்காமல் நம் எண்ணங்களைக் குழந்தை மீது எளிதாகத் திணிக்கிறோம் என்ற வருத்தம் உட் புகுந்தது.

பசி இல்லாத போதும் உனக்கான உணவை உண். வாந்தி வருவதாக இருந்தாலும் கவலையில்லை. களைப்படையாவிட்டாலும் படுக்கைக்குச் செல். இப்படித்தானே குழந்தைகளைச் சித்திரவதை செய்கிறோம். தூங்க வேண்டும் என்று நினைக்கும் பொழுது தூங்க விடாமல் பசியாக இருக்கும் பொழுது சாப்பிட விடாமல்,மொத்தத்தில் தேவையான பொழுது தேவையானதைத் தராமல், நம் வசதிக்கல்லவா குழந்தைக்கு எல்லாவற்றையும் திணிக்கிறோம்?

வகுப்பறையிலும் இதுதான் நடக்கிறது. கற்க வேண்டும் என்ற மனநிலை இருக்கிறதோ இல்லையோ? கேட்கப் பிடிக்கிறதோ இல்லையோ? நான் சொல்வதை நீ கேட்டுத்தான் ஆக வேண்டும்; எழுதித்தான் ஆக வேண்டும். இது குழந்தைக்கு நாம் செய்யும் கொடுமையல்லவா? அதனால் தான் அனைவரும் குழந்தை மையக் கல்வியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம்? இதை அனைத்து வகுப்பறையும் பின்பற்றுகிறதா?

**எது நல்ல குழந்தை?**

‘இரவு முழுக்கத் தூங்கும் குழந்தை நற்பண்புள்ள நல்ல குழந்தை, ஆரவாரமாக சத்தம் போட்டுக் காரணம் இன்றிச் சங்கடமான உணர்வுகளைத் தரும் குழந்தை மோசம்’ என்று குழந்தையை நாம் எளிதில் மதிப்பிடுகிறோமே அது எவ்வளவு பெரிய தவறு. எதைக் கொண்டு தீர்மானிப்பது? அது போலத்தானே வகுப்பறையில் துரு துருவென்று ஓடிக் கொண்டிருக்கும் குழந்தையையும், கேள்வி கேட்கும் குழந்தையையும், ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும் குழந்தையையும் அடங்காது என்று மதிப்பிட நாம் யார்? இதைச் சற்று சிந்தித்தோமானால் இனி ஒருபோதும் குழந்தைகளை அரவணைப்பதில் குழப்பம் இருக்காது என்பதை அறுதியிட்டுக் கூறிய உதாரணங்கள் இன்னும் இதயத்தில் பொன்னெழுத்துகளாக மின்னுகின்றன.

“வசந்த காலம், இலையுதிர் காலம் போல குழந்தை வளர்ச்சியும் ஒரு வளைகொடு போன்றது. அதில்

வேலையும் ஓய்வும் கலந்திருக்கும். இதில் வளைகோடு என்று குழந்தையின் வளர்ச்சியை ஒப்பிட்டுக் கூறியிருப்பது குழப்பத்தை அளிப்பதாக இருக்கிறது. ஆசிரியர் சுருள் கோடு என்று கூறுகிறாரா? அல்லது வளைகோடா என்று கூறுகிறாரா? என்பது இன்னும் புதிராகவே உள்ளது. நான் என்பதைக் கண்டறியும் தன்மை, வளர்ச்சி, செயல்கள் என அனைத்தும் சுருள்கோடுகளாக அல்லவா பிரதிப்பலிக்கின்றன?

**மரியாதை வேண்டும்:**

"ஒரு வழியாக நாளை வந்தடையும் போது, நாம் அடுத்த நாளைக்கு காத்திருக்க ஆரம்பித்து விடுவோம். எத்தனை சத்தியம். இந்த நாளைக்காக நாம் ஓடுவது மட்டுமின்றி, குழந்தையையும் வாட்டுகிறோம். இன்று தர வேண்டிய மரியாதையைத் தர வேண்டும் என்று குழந்தை எதிர்ப்பார்ப்பது நியாயமே." அக்கறை இன்மையால் குழந்தைகளின் இன்றைய அழகை, அறிவை, ஆற்றலை, ஆடல் பாடல்களைத் தரிசிக்கத் தவறுகின்றோம்" இன்று என்னவாக இருக்கிறார்களோ அவர்களை முழுவதுமாக ஏற்கத் தயங்கின்றோம்.

மரியாதையை எதிர்ப்பார்க்கும் குழந்தையிடம் ஏய் இதைச் செய், எழுது, படி, உட்கார், சொல் என எத்தனை ஆணைகளைப் பிறப்பிக்கின்றோம். குழந்தை என்ன நினைக்கும்? என்ன 30 பேருக்கும் ஒரே ஆணை, ஒரே செயற்கை கற்பித்தல். அவர்களின் தனித்துவத்தை எண்ணிப் பார்க்க யாருக்குமே நேரம் கிடையாது.

"வளர்ந்தோரின் சிக்கல்களைச் சிரமங்களைப் புரிந்து கொள்ளவில்லை' என்று அவளை அவமதிக்கின்றோம். புரிந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த முயற்சி செய்திருக்கிறோமா...? என்றால் அங்கு வெறும் கேள்விக் குறி மட்டுமே மிஞ்சும். புரிய வைக்க வேண்டும் என்பது வளர்ந்தவர்களின் தலையாய கடமை என்பதை இப்புத்தகம் உணர்த்தியுள்ளது.

**புத்தக ஆசிரியரின் சாட்டையடி:**

"உலகின் கொடூரங்களில் மிகவும் மோசமானது ஒரு குழந்தை தன் அப்பா, அம்மா அல்லது ஆசிரியருக்குப் பயப்படுவதாகும்." புத்தக ஆசிரியரின் இவ்வரிகள் ஒவ்வொரு பள்ளியின் சுவரில் மட்டுமல்ல ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் பொறிக்கப்பட வேண்டும். ஆசிரியரைப் பார்த்து பயப்படும் குழந்தையால் நன்கு கல்வி பயில இயலுமா? பயம் என்ற உணர்வு பொய் பேசத் தூண்டும், உண்மையை மறைக்கத் தூண்டும். அப்படியிருக்க குழந்தையால் எப்படி அறிவைப்பெற முடியும்? குழந்தை அதற்கான முயற்சிகளைச் செய்யவும் தயங்கும் அல்லவா? "நம்புவதற்கும், நேசிப்பதற்கும் பதிலாக அவர்களைப் பார்த்துப் பயப்படுகிறது." எழுத்தாளரின் இந்த வரி பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு சாட்டையடி.

குழந்தைகள் கல்வியையும் பள்ளியையும் மறுப்பது இத்தகைய சூழல்களால் தான். ஆசிரியர் அம்மாவாக மாறும் பொழுது குழந்தைகளிடம் நம்பிக்கை வளர்கிறது; அதன் மூலம் கற்றல் மிக எளிமையாக நிகழ்கிறது என்பதைத் தெளிவாக உணர வைத்திருக்கிறார் ஆசிரியர்.

"குழந்தையின் வெற்றி பெரியவர்களால் தீர்மானிக்கப்படுவதில்லை. மற்ற குழந்தைகளின் மதிப்பீடுகளால் தீர்மானிக்கப்படுகிறது" என்பதை எத்துணை அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார். எனவே தான் குழந்தை ஒவ்வொரு முறையும் குழுக்கற்றலில் அதிக ஈடுபாடும் ஆர்வமும் காட்டுகிறதோ? மெதுவாகக் கற்கும் மாணவன் ஆசிரியரிடம் கற்று கொள்வதை விட தன் சக நண்பர்களுடன் இருக்கும் போது எளிதாகக் கற்று கொள்கிறான் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

**யார் பெரியவர்?**

குழந்தைகளைப் பொருத்தவரை "பெரியவர்கள் புத்திசாலிகள் இல்லை. எல்லாவற்றிற்கும் கோபம் கொள்பவர்களாகவும் சத்தம் போடுபவர்களாகவும் உள்ளனர். என்ன அழகான விளக்கம். எத்தனை முறை, ஏன் ஒவ்வொரு முறையும் இதைக் குழந்தைகள் நம்மிடம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். நாம் தான் புரிந்து கொள்ளாமல் போய்விட்டோம்.

"குழந்தைகள் நாளைய மனிதர்கள் அல்ல. இன்றைய மனிதர்கள்தான்"

"குழந்தைகள் பொய் சொல்ல விரும்ப மாட்டார்கள்;

உண்மையைச் சொல்ல இயலாத சில நேரங்களில் நேர்மையை உரக்க உரைப்பது அவர்களின் மௌனமே”

ஆகா! படிக்கப் படிக்க யாரோ தலையில் சம்மட்டியால் ஓங்கி அடித்துக் கொண்டே இருப்பது போன்ற உணர்வு. இக்கட்டுரையில் நான் எழுதியது சில; புத்தகத்தில் ஆசிரியரின் எழுத்துக்கள் உரைப்பதோ பற்பல. ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றோரும் வாசிக்க வேண்டியதாக நான் கருதும் புத்தகம் இது. வாசித்துப் பாருங்கள் வாய்ப்பிருந்தால். உங்கள் இதயம் இளகி உருகி அன்பாக ஊற்றெடுக்கும்.



**மு. சாந்தகுமாரி,** தொ.ப.ஆ.,
அ.தொ.ப, வடுவக்குப்பம்

# UNDERSTANDING ADOLESCENCE

The classroom, as we know it, is not just a physical space filled with benches, desks, tube lights and a blackboard. It is an intellectual space where ideas are discussed; it is a social space where we interact with each other; it is an emotional space as well where we see a range of emotions from happiness and enthusiasm to aggression and anxiety. Knowing this, what kind of a space do we want to create in our classrooms and how do we build such a space…This was the topic of discussion on January 7th at the Mudaliarpet Teacher Resource Center. Jyothi Ravichandran, a psychologist and professional counsellor from Shishu Vikas Trust, Chennai, facilitated the session. Read on for a summary of the discussion



**Adolescent Needs** - Children misbehave. However, they misbehave for a reason and a lot of it is a cry for help. The first step towards problem solving lies in being able to identify the root cause of the problem. On close observation, the teacher will be able to identify any pattern to the behavior there may be and hypothesize the reason behind it. For example, does the child act up before an exam? This could indicate that the child is anxious/nervous. This hypothesis will tell us what we can do to reduce the behavior. Adolescent misbehaviors can be put under three broad categories. It could be an issue of Autonomy, Belongingness or Competence, often referred to as the ABC of adolescent issues.

After showing these videos teacher can ask the children questions to know whether they have learned the lesson or give some worksheets in the class. Example:

Let children complete these tables after watching the video.

| Animal/Bird | What I can do | What I can't do |
|---|---|---|
| Little Bird | Fly/hop | jump |
| Elephant | stomp | sing |
| - | jump | - |
| - | crawl | - |
| squirrel | | |
| | climb | swim |
| | wiggle | sing |
| buffalo | | |
| Boys and girls | | |

**Lesson plans for "The Ship of the Desert"**

- Showing the Video (Where Do Camels Store Water)
  - ❖ Teacher can show the children this video (Where Do Camel Store Water) before taking the lesson to let the children

understand what body mechanism helps a camel to survive in a desert. The video is in the form of a conversation between a boy and a girl travelling through the desert on the back of a camel. The teacher can let the children listen to the conversation and ask some questions at the end to test whether they have understood it or not.

https://www.youtube.com/watch?v=KDkkkM-ZWzA

- Wearing Mask and acting out the lesson with a new script.

  - Once the teacher has taken the lesson, the teacher can write a new script based on the textbook and the children can act it out in the class. Teacher can include more characters in the conversation and can change the settings too if so desired. Let the dialogues be simple for the children with the emphasis on the habitat of animals and their suitable adaptations to survive in their habitat.

**Model:-**

**Setting :** A Forest near Pond.

**Animals :** Lion, Camel, Crow, Seal (Imaginary conversation between them)

| |
|---|
| Lion: Hello Dear friends. I am the king of the forest. Welcome to the Forest. |
| Camel: Thank you Mr. King of the forest. How do you live in this cold, dark forest? |
| Lion: This is my place. I like here. I can hunt animals and eat them. |
| Seal: I can't imagine living in a forest or a land. I am happy in this pond. I can swim with my fins in the deep of the water. |
| Crow: Can any of you fly? It is very good to see the forest from the sky. I can fly very fast. |
| Camel: I am the ship of the desert. Can anyone run in the sand? I can run through the desert carrying 25km/h. Can you imagine? |
| Lion: I can run at a speed of 80km/h in the forest. But I can't run through the hot desert. |
| Seal: Can any of you swim in a stream? I can easily swim. Hey camel, I heard there is no water in a desert. How do you live there? |
| Camel: It's true that there is no water in a desert. But I can drink 200 bottles of water at a time and I store it. |
| Crow : Do you store this much water in your hump? |
| Camel: No. I don't store water in my hump. I store fat in my hump. |
| Lion: I don't like camel's hump-bumpy shape. I like my shape. See my paws are better than camel's padded, thick feet. |
| Crow: I like my shape. I am lightweight. My legs help me to catch my prey easily and fly so high. |
| Lion: ----------- |
| Seal: ------------- |

Let the dialogue continue like this and the teacher can finish it at a point when all the animals agree that their features, shapes, food and habitat are all suitable for each of them to survive and no animal can claim it has got the best habitat or shape. Let children learn to appreciate animals for their features.

- Making an Animal profile or Album

  - Teacher can ask the children to create Animal Profile/Albums about the animals they like (Individual or group activity). Once the children finish making their albums, teacher can paste them in a chart paper and display them in the classroom

**Model:**

- Name : Camel
- Picture of the camel (drawn by the children or photo):



- Nick name: Ship of the desert
- Habitat/place to find: desert
- Height: 1.8 to 2 m
- Weight: 400 -600 kg
- Life Span: 40 years
- Diet: Leaves, grass, thorns (Herbivores)
- Shape/Body Features: Humpy-bumpy, Thick and padded feet
- Special Features: 1.Camel can survive without water for more than two weeks.
  2. Camel store the food in the form of fat in its hump.
  3. Camel has thick skin to protect it from sunburn.
  4. Camel drinks 200 bottles of water at a time.

➢ **Conducting Quiz Game**

❖ Once the children have finished making the animal album (Previous activity) the teacher can conduct a quiz game in the class. Since children have learned so many things about the habitat and features of the animal teacher can test their learning results through the quiz game. Teacher can divide the whole class into 4 or 5 groups. Each group member asks questions to the other group members. One student can be assigned the task of time keeper/moderator.

Quiz game will be interesting if there can be different rounds like pass rounds, Yes or No question round, True or False round, Options rounds etc. Children can make use of the questions given in the exercise part of the text, of new vocabulary they have learned etc. Teacher can assign

points for the group for each question. Pass questions when answered may get some extra points. It's better not to give negative marks for wrong answers for many children may keep quiet because of the fear of making a mistake. The main purpose of the quiz is to test children's learning while entertaining them through fun.

| Some Sample Questions for Quiz: |
|---|
| Category – **Yes or No Round (No Passing of Questions)** |
| 1. Do camels store water in their humps?<br>2. Is grassland a habitat? |
| Category – **General (One word answers) Round. (Questions can be passed)** |
| 1. Name the King of the forest?<br>2. Name any animal that has got paws? |
| Category – **Optional Round** |
| 1. The feet of the camels are? a) Long and fat b) thick and padded c) thin and padded d) thick and fat. |
| Category – **Vocabulary Round (Questions can be passed)** |
| 1. What is a dry, hot, sandy place where the rainfall is little and camels can be seen called? DESERT |

- **Worksheets for children**

Teachers can make use of these worksheets for they test children's understanding of what they have studied in the lesson and the things they have learned in science lessons about animals and their characteristics.

**A) Find out the Habitats!**

- How many habitats can you find hidden in this maze?
- Write their names below the table.
- Now, next to the habitats write examples of the animals who live there.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **B** | **I** | **F** | **A** | **R** | **M** |
| **P** | **L** | **O** | **E** | **I** | **O** |
| **O** | **A** | **R** | **D** | **V** | **U** |
| **N** | **K** | **E** | **S** | **E** | **N** |
| **D** | **E** | **S** | **E** | **R** | **T** |
| **W** | **A** | **T** | **A** | **L** | **A** |
| **S** | **T** | **A** | **K** | **Y** | **I** |
| **E** | **T** | **S** | **S** | **E** | **N** |

**Example – LAKE – Seal,**

**B) Animal Chart Worksheet –**

This is a worksheet where children have to fill the columns and answer the questions. Teachers can add or change this worksheet depending upon the children's ability. If the children can write their own sentences, then the teacher can delete many of the pattern sentences in the exercise: it lives in, it is, it can, it eats etc. Let children write their own sentences and complete the worksheet. Teacher can download this worksheet from the link below.

https://en.islcollective.com/resources/printables/worksheets_doc_docx/animal_chart/animal-body-parts/23610

Activity Ideas

# Home and Abroad

**CBSE, EVS, Class - IV, Chapter - 24**

**Learning outcomes:**

- To compare the landforms, languages, clothing, food habits, of other countries with those of India
- To compare and familiarize the students with the currencies of India and other countries
- To develop the knowledge of stamp, flag and coin collections

**Activity 1**

Globe game: give a globe to the students and ask them to identify different countries, places on the globe. They are also asked to locate where they live.

**Activity 2**

Student can be asked to interview a relative of theirs or their friend's who is living abroad. The following questions can guide in conducting an interview with the person/relative who lives in another country. Interview can be through phone, email, or through any social media. Some more questions can be added.

1. In which country and place are you living?
2. How long have you been living there?
3. Did you go there for studies or for work? Was there any reason?
4. What food do you eat?
5. What kind of house do you live in?
6. How do you travel in that place?
7. What do you do in your free time?
8. What are some festivals celebrated there?

Information collected from the relative can be collated by each student and shared with the entire classroom. There can be a discussion on the sharing.

**Activity 3**

Report writing (project) - ask the students to discuss and write a report on comparing Abu Dhabi, Kashmir and the place where they live. They can also draw pictures or present photographs.

| SL No | Points | Where you live | Abu Dhabi | Kashmir |
|---|---|---|---|---|
| 1 | Climate and weather | | | |
| 2 | What people wear | | | |
| 3 | The trees and plants | | | |
| 4 | The kind of buildings | | | |
| 5 | The traffic on the roads (kind of vehicles) | | | |
| 6 | The common food items | | | |
| 7 | Language | | | |
| 8 | What kind of crops/farming | | | |
| 9 | Common animals and birds seen | | | |
| 10 | Landscape | | | |

Sample data collection sheet for activity 2

These reports can lead to creating a poster or writing a story.

**Activity 4**

My currency (group activity): give if possible original rupee notes of different denomination and ask to find answers to the following questions.

1. What is the name of the currency?
2. What is the value of the currency note?
3. To which country does the currency note belong? How did you know?
4. Whose picture can you see on the note?
5. What are the other pictures you see on the note?
6. Can you find any numbers on the note other than the value?
7. Write the name of the bank from the currency note
8. How do you find out if the note is original or fake? Video on this https://www youtube.com/watch?v=h0dAEb5jEiI.Can be used to recognise security features on an India currency note.
9. Take a 100 rupee note and observe it carefully. How many languages can you see on the note?

After completing the activity with Indian currency notes, dummy notes of other countries can be given to students to answer the same questions. By the end of the activity students should be able to identify features in a currency note and also to compare it with currencies of other countries.

**Activity 5**

Students can be encouraged to start a hobby for themselves. Students could collect and prepare an album of Photographs of tourist places, Collection of stamps, Collection of coins and currencies (dummy or original), and Collection of flags of various countries.

Students could write about their currency. How do they use it etc.

The below matching table can be given as a worksheet for the students. They will be asked to cross match the flag and currency with the country's name.

| Flags | Country | Currency |
|---|---|---|
| | India | |
| | USA | |
| | Saudi Arabia | |
| | Japan | |
| | England | |




**M. Ramakrishnan**
PST, GPS
Sulthanpet

Activity Ideas

# NUMBERS (51 TO 100)

**CBSE, Maths, Class - I, Lesson 11**

**OBJECTIVE :**

- Knowing the numbers and number names from 51 to 100.
- Understanding the place value of numbers from 51 to 100.
- Ability to count, compare and order numbers from 51 to 100.
- Ability to solve simple real life problems.

Resource for this lesson: Sticks (Bundles of tens and ones), Straws, Fake currency notes, Worksheets

**Teaching Process**

**Basic Ten Blocks:** Teacher gives grouping activities using basic ten blocks. Students work in groups. They are given number cards up to fifty. They have to show the number in tens and ones using the basic ten blocks. This activity recalls the number system or the place value system. Teacher also practices counting in ten activities. Using the abacus, students skip counting numbers up to 50 by tens.

**Straws to Group :** Teacher gives straws to each group. Asks the children to bundle the straws into tens. Asks them to make as many bundles as they can. Then teacher conducts a game 'show me the number'. Children have to place the bundles of tens made by them in the middle and they have to run around them. Teacher gives number cards which have the value into tens writtten on them, eg 10, 20, 30, etc., to each group which has written numbers. When the teacher calls out a number, say 50, the children having the numbers 50 from each group should go and pick up 5 bundles of tens. Like this the game goes for 6 rounds. After that the teacher place some loose straws representing ones. Then the game continues for all other numbers from 51 to 99. And now teacher gives a few more cards to students. This number cards activity helps children to learn from their peers. Since children have prior knowledge in counting in tens, they are able to do this activity.

**Break for Discussion:** Break in between activities to discuss questions which students have from above two activities and proceed to build the concept. Teacher asks the children to speak about the activity. Asks some questions based on the activity.

How did you make these bundles?

How many bundles do you have?( asks this question to each and every student) and asks them to count their bundles.

Teacher asks the students to count in five-tens, six-tens, seven-tens and so on.

After, Students count their bundles as five ten, six tens, etc.. Teacher introduces the terms sixty, seventy, eighty, ninety and hundred. Asks the students to say / repeat the words with her. After this activity teacher could check their understating by asking questions of one or two students

**Sticks to bundle:** Teacher again gives sticks to the children and asks them to bundle them into tens. As soon as the children make a bundle

they have to come to the teacher and exchange it for fake rupee notes. For one ten they will get a ten rupee note. The children should make as many bundles of tens as possible Teacher asks the students to say that how many ten rupee notes they have. Students will count and give the answer as one ten, two tens, three tens and so on. From this the teacher elicits the concepts of two tens, three tens, four tens and five tens. Teacher introduces the numbers and number names 50, 60, 70, 80 and 90.

**Build the concept:**

Write in Textbook: Teacher asks the children to write the numbers from 51 to 70 in their text books (page 119) by counting the number of tens and ones given in the picture. Teacher also gives them the picture for the given number where the



picture is missing in the number on the same page.

**Grid Sheet:** Teacher gives a hundred grid sheet and asks children to draw some pictures in that grid sheet and to colour them. After doing this the students count the number of boxes they have coloured and write the total in tens and ones. For example: the dog covers 21 boxes. There are 2 tens and 1 one in it.

**Making number thorans:** Teacher gives number cards to each group to make colourful



number thorans. Numbers should be classified by grouping them, with tens family together for instance.

Eg. Number thorans of fifty family. In this thoran numbers from 50 to 59 will be present.

Number thoran of sixty family: in this thoran numbers from 60 to 69 will be present. Likewise students will prepare number thorans.

http://pyp3batci.blogspot.in/search/label/Math

Write 51 to 100: Teacher gives practice in writing numbers from 51 to 100. Students read and write the numbers in the worksheet given.

Worksheets 2 : Teacher gives missing number worksheet and asks students to complete it.



**R. Gomathy,** P.S.T,
Savarirayalu GPS, Pondicherry




Source :www.worksheetfun.com

# Write each missing number.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 3 | | 5 | | 7 | | | 10 |
| 11 | | 13 | | 15 | | 17 | | | 20 |
| 21 | | 23 | | 25 | | 27 | | | 30 |
| 31 | | 33 | | 35 | | 37 | | | 40 |
| 41 | | 43 | | 45 | | 47 | | | 50 |
| 51 | | 53 | | 55 | | 57 | | | 60 |
| 61 | | 63 | | 65 | | 67 | | | 70 |
| 71 | | 73 | | 75 | | 77 | | | 80 |
| 81 | | 83 | | 85 | | 87 | | | 90 |
| 91 | | 93 | | 95 | | 97 | | | 100 |

# MONEY

## CBSE, Maths, Class - I, Lesson 12

**OBJECTIVES:**

- Identify Indian coins and currencies
- Appreciate the value of money
- Estimate the price of a few objects
- Make different amounts using different combination of coins

**MATERIALS REQUIRED**

Fake currency, flash cards with picture, YouTube video and worksheets.

**Tracing the coin:** Teacher gives some coins to the students and asks them to trace the coin on paper using coloured pencils. While doing the activity, the students will observe the numbers on the coins. They are exposed to the concept of coins by this activity. Teacher may start a discussion about this activity. Asks question like:

What is this? (Showing the coins)

When will you use this?

Have you ever used this?

This discussion will help to talk about the value of money.

**Collection of fake currency notes:** Teacher gives prior intimation to the students to bring fake currency notes. Teacher will also have a collection of fake currency notes. Teacher gives 'think pair share' activity. In this activity students have to divide into pairs among themselves and show their collection to their pair partner and then speak about it. The conversation should include the following points:

What do they have with them?

How did they get those fake notes?

Who bought them?

From where did they get them?

This activity lasts for five minutes. After that the teacher asks the children to share the things they have discussed. This discussion will address the following points:

Appreciating the value of money.

Difference between the currency notes. That is the value of each and every currency note is different.

Fake currency notes have no value.

Have they ever seen real currency notes? When and where they have seen them?

Further on in this activity, teacher should ask students to share times when they have been in a shop and what they brought. How they know the amount to pay for the things they buy?

**Time for discussion:** After a few activities, teacher asks student to share what has been their learning about money, what they have understood. What do the real life situations mean to them? How is money important in real life? What they could buy for their education?

Wherever teacher could help them to understand teacher should: the aim is not to understand all about money and its connection with real life; according to their age they could understand

that money is important because it buys things, and there is a value for each amount.




**Guess the price:** Teacher asks student to sit a group for this group activity. Students collect / draw / paste the pictures of the objects in the corresponding amounts. For example, teacher uses different flashes that mention an amount on a flash card, or teacher could use chart and write the amount. If student take a picture which costs, say, 35 rupees, then the student should draw / paste the equal amount in their worksheet or note book. This game will thus give an idea about equaling the amount of money in different combinations. When students do this in a group, it helps them to learn from their friends. This part of the activity is important in understanding equaling amounts in different combinations. Finally teacher will ask each student to show to other students and discuss the following points:

1. Why is there a different combination?
2. Is the amount still equal?
3. Are there any other possibilities?

If any students miss the answer, teacher could help them to find the combination

**Different combination for a Coin:** Pasting / drawing different denominations of the amount on a chart. Teacher conducts activity; for example, teacher divides student into two groups. If one group takes a 5 rupee coin or paper money then the other group should show the possibility of different combinations after one round of the






CBSE Class-1 Maths Chapter-12 Money

activity the other group makes the first move.

**Video to Watch and discuss:** students watch the YouTube video link below; after they have watched it, teacher takes time to discuss with students and connect different parts of the lesson.

**Source:**

https://www.youtube.com/watch?v=CK4tfh6-1sk
https://www.youtube.com/watch?v=ykBaG3xISn0

**Shopping Fair:** This activity helps to assess students' understanding of money and its importance. A shopping game is conducted in the classroom. Objects with price tags are set out. Students have to buy things using the amount they have collected from the teacher who will give an equal amount to each group. Some objects made by the students will be on sale in the fair and will be sold to visitors. With the amount taken students can buy something for their classroom. Teacher could ask students to make objects themselves or to bring with them things that are available for this activity.



**R. Gomathy,**
P.S.T, Savarirayalu
GPS, Pondicherry



# Women's Fortnight – 8th – 15th March 2017

Dear Head Teachers, Teachers,

Women's Day is around the corner. This is a great occasion for us to discuss the equal rights of girls and women and celebrate women who fought against all odds and left their mark on society. Would you like to have an interesting discussion with your students this women's day.

Here are a few ideas -

## 1. INSPIRING WOMEN IN HISTORY, SCIENCE, LITERATURE\READING, RECITAL, DRAMA

Students could discuss inspiring women in history, science and literature – read about their childhood, their dreams, their struggles and how they made the world proud. You could organize them for students in your class or make it a part of the school assembly. This would be a good time to introduce your students to the ideas of writers like Bharatiyar and Avayar who have written stories and poems celebrating women and their role in society.. You could organize reading circles, recitals or dramas based on the work of women writers

## 2. MOVIE SCREENING AND DISCUSSION:

There are quite a few movies and documentaries on inspiring women. You could screen a movie for your class / school followed by a discussion.

## 3. DISSCUSSION ON GENDER EQUITY:

Use case studies to discuss issues of gender equality, break stereotypes and understand adolescence.

## 4. ESSAY WRITING, PAINTING:

You could organize an essay writing / drawing activity on the theme of "The woman who inspired me" or "A better world for women". These papers can be displayed in the classroom and shared in the school assembly too.

*If you would like to join the discussion and plan an event in your school, do let us know. You will receive posters, readings and other materials for organizing these events in your school.*

# பள்ளியில் யோகா பயிற்சி



மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான யோகா பயிற்சி இருளன்சந்தை அரசுப் பள்ளியில் 24.2.17 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மாணவர்களுக்குத் தனியாகவும் பெற்றோர்களுக்குத் தனியாகவும் நடந்தது. யோகா தொடர்பான விழிப்புணவு மற்றும் பயிற்சிகளை நடத்தும் 'மகாயோகம்' அமைப்பினர் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்தனர். இந்தப்பயிற்சி தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களும் எளிய யோகா செய்முறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும் நல் வாழ்வுக்கும் தேவையான உணவு மற்றும் அடிப்படை சுகாதாரம் பற்றித் தகவல்களைத் தெரிவிப்பதற்காகவும் திட்டமிடப்பட்டது.

**மாணவர்களுக்கு யோகா:**

யோகாசனத்தைக் கடுமையாகச் செய்யாமல் விளையாட்டாகச் செய்யும்படியாக நுட்பங்களுடன் செய்து காட்டினர். கைகள் சுழற்றுவதும், எதையாவது தள்ளுவது, நின்று கொண்டே ஓடுவது என்பது போன்ற செயல்பாடுகளைச் செய்ய வைத்து அதை மாணவர்கள் சுலபமாகவும் மகிழ்ச்சியாகவும் செய்தனர். நினைவாற்றலுக்கு மூச்சுப் பயிற்சி, கவனத்திற்காகத் தியானம், உடல் வலிமைக்கான யோகாப் பயிற்சிகள் என தனித்தனியாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது. மாணவர்கள் ஆசனத்தின் பெயரையும் அதைச் செய்யும் முறையையும் எதற்காக செய்கின்றோம் என்பதையும் கற்றுக் கொண்டனர்.

**பெற்றோருர்களுடன் கலந்துரையாடல்:**

மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ள யோகாசனப் பயிற்சிகளை வீட்டில் செய்ய ஊக்குவிக்கக் பெற்றோர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. பெற்றோர்களுடன் நடந்த உரையாடலில் அவர்கள் என்ன உணவு தருகிறார்கள் என்பதைக் கேட்டு அதை எப்படி தரலாம் என மாற்றிக் கூறினர்.

**பெற்றோர்கள் செய்யவேண்டியவை:**

- தினமும் குழந்தைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்பது
- விளையாட சொல்லிப் பார்ப்பது
- சுகாதாரமாக இருப்பதற்கு வலியுறுத்துவது,

- பாடல் கலையில் குழந்தைதளை ஈடுபடுத்துவது,
- தினமும் உணவில் கீரையைச் சேர்ப்பது
- தினமும் அவர்களின் செயல்களுக்குப் பாராட்டு அளிப்பது.

ஆகியனவற்றைச் செய்வது பற்றி உரையாடலில் வலியுறுத்தப் பட்டது.

**பெற்றோர்கள் செய்யக் கூடாதவை:**

- குழந்தைகளை அடிப்பது,
- அவர்களை எதற்கும் தகுதி இல்லாதவர்கள் என்று கூறுவது,
- வெள்ளைசர்க்கரை(சீனி), மைதா, பரோட்டா, நூடுல்ஸ், குளிர்பானங்கள் ஆகியவற்றை தவிர்ப்பதுப் பற்றியும் பேசினர்.

உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு மட்டும் அல்ல. இந்தச் சமுதாயத்திற்கே முக்கியமானவர்கள். அவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் மாற நீங்கள் சிறு சிறு விஷயங்களைக் கடைபிடித்தால் போதும் என்பதை அழகாக புரிய வைத்தனர்.

இந்நிகழ்வில் பள்ளித்துணை ஆய்வாளர் குமார் அவர்களும் கலந்து கொண்டு பெற்றோர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயனுள்ளதாக இருந்தது. மேலும் இப்பயிற்சி ஆசிரியர்களுக்கு உற்சாகத்தை அளித்தது.



**ஆ. மஹேஸ்வரி,** தொ.ப.ஆ.,

அ.தொ.ப, இருளன்சந்தை

# பள்ளியில் யோகா

**கூர்மை, நேர்மை, சீர்மை, பொறுமை, ஓர்மை - இவை தரும் வாழ்வில் இனிமை**

**யோகாப் பயிற்சி:**

அரசு தொடக்கப்பள்ளி இடையார் பாளையம் வட்டம் 3 யில் 24.02.17 அன்று காலை 10 மணிக்கு மஹாயோகம் அறக்கட்டளை மூலம் இலவச யோகக் கலைப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் கிராம மக்கள் பங்கேற்றனர்.

மஹா யோகத்தின் குருஜி திரு. குணாநிதி டாக்டர் அவர்களின் தலைமை சீடர் திரு. இரமேஷ் ரிஷி அவர்களும் மற்றும் மஹாயோகத்தின் தியான அன்பர்களும் இம்முகாமை நடத்தினர்.

திரு. இரமேஷ் ரிஷி அவர்கள் பெற்றோர் மாணவர்கள் ஆசிரியர்கள் இம்மூவருக்கும் பல நல்ல கருத்துக்-களையும், ஆலோசனைகளையும் வழங்கினர். இன்றைய மாணவ சமுதாயத்தை வளமுடனும் நலமுடனும் ஆற்றலுடனும் எவ்வாறு வழி நடத்துதல் வேண்டும் என்பதைப் பல கதைகளுடன் தெளிவாக விளக்கினார்.

மாணவர்களின் இன்றைய உணவுப் பழக்கம் எவ்வாறு உள்ளது என்பதையும் எத்தகைய உணவுகளை நாம் உண்ண வேண்டும், பெற்றோர் அளிக்க வேண்டிய ஊட்டச்சத்து உணவுகள் எளிய முறையில் எவ்வாறு தயாரித்துக் கொடுக்கலாம் என்பதை நகைச்சுவை உணர்வோடும் மாணவர் மனதில் பதியும் வண்ணம் விளக்கினார்.

ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு கற்றலில் முழுமையாக ஈடுபடுத்துவது மாணவர்களின் கவனம் சிதறாமல் அவர்களை எப்படி ஈர்ப்பது போன்ற பல புதிய உத்திகளை ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறினார். மேலும் இப்பயிற்சியில் மாணவர்கள் உடல் நலனை எவ்வாறு பேண வேண்டும். உடல் வலுவடைவதற்கான யோகா, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதற்கான யோகா, அடிக்கடி சளி பிடிக்காமல் இருக்க தேவையான கிரியா பயிற்சி, மனதை ஒரு நிலைப்படுத்தி ஞாபகத்திறன் வளர்த்தல், செல்களின் ஆற்றலைத் தூண்டும் பயிற்சி தியானம் இவை அனைத்தும் எளிய வழியில் மாணவர்களுக்குச் செயல்முறை விளக்கமாக திரு. இரமேஷ் ரிஷி அவர்கள் செய்து காட்டினார். மாணவர்கள் ஆர்வத்துடனும்



உற்சாகத்துடனும் பயிற்சிகளைச் செய்து பழக்கினர். ஆசிரியர்களைப் பழக்கியதோடு மாணவர்களுக்குத் தினமும் பயிற்றுவிக்க உறுதி கொண்டனர்.

மேலும் புதுக்குப்பம், தவளக்குப்பம் தொடக்கப்பள்ளி வட்டம் 3 யைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் இதில் பங்கு கொண்டனர்.

இப்பயிற்சி முகாம் ஆசிரியர்களுக்கும் மாணவர்-களுக்கும் பெற்றோர்களுக்கும் மிகுந்த பயனுள்ள-தாக இருந்தது.

**தவப்பயிற்சி**

தவம் என்பது தனிப்பட்ட இடத்தில் விரதமிருந்து தன்னை மறந்து காலத்தை மறந்து செய்வதல்ல.

ஒரு நிமிடம் மனதை ஒருமுகப்படுத்தி ஒரே சிந்தனையில் இருப்பது கூட தவம் தான்.

எங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு எளிய முறை உடற்பயிற்சியாகக் கை, கால், கண் மற்றும் மூச்சுப்



பயிற்சியுடன் இரண்டு நிமிடம் தவம் செய்யவும் கற்றுக் கொடுத்துள்ளோம். காலைக் கூட்டத்தில் இதற்கு நேரம் இருப்பதில்லை. எனவே காலை இடைவேளையில் 5 நிமிடங்கள் எடுத்து இரண்டு வகுப்பு மாணவர்களை ஒன்றாகச் சேர்த்து யோகப் பயிற்சி மேற்கொள்ளச் செய்கிறோம். இதனால் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் வாரம் இருமுறை பயிற்சி செய்கின்றனர்.

இதன் மூலம் மாணவர்களுக்கு உடல் ஆரோக்கியத்துடன் வலிமையும் ஏற்படுகிறது. மேலும் கூர்மை, நேர்மை, சீர்மை, பொறுமை, ஓர்மை போன்ற குணங்களையும் வளர்க்க முடிகிறது. இக்குணங்கள் மாணவர்களின் கற்றலுக்குப் பேருதவியாக இருக்கும்,

இவைமட்டுமின்றி ஒழுக்கப் பண்பாட்டையும் மாணவர்களிடம் வளர்க்கிறோம். கலைக்கூட்டத்தில் இந்த இரண்டு உரைகளையும் அனைத்து மாணவர்களும் கூறுவர்.

“நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதுக்கும் துன்பம் தரமாட்டேன். துன்பப்படுவோர்க்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.”

“ஏரி, குளம், கிணறு, ஆறு எல்லாம் நிரம்பி வழிய மாரி அளவாய் பொழிக! மக்கள் வளமாய் வாழ்க!”



**புவனேஷ்வரி,** தொ.பா.ஆ,
அ.தொ.ப, இடையார்பாளையம்



**சு. தமிழரசி,** தொ.பா.ஆ,
அ.தொ.ப, தானம்பாளையம்

# பாவேந்தர் தமிழ் மன்றம்

**எங்களுக்குப் பயமில்லை; திறனை வெளிப்படுத்தத் தடையுமில்லை**

மாணவர்கள் முதன்முதலில் பள்ளிக்கு வரும்போதே தத்தம் தாய்மொழியில் சரளமாகப் பேசும் திறனுடன் தான் வருகின்றனர். மொழி வகுப்பிலும் இந்த அடிப்படைத் திறனைக் கொண்டு எவ்வாறு மற்ற திறன்களை வளர்க்கலாம் என்றே ஆசிரியர்களும் வகுப்பறைச் செயல்பாடுகளைத் திட்டமிடுகின்றனர். இச்சூழலில் மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடம் மொழித்திறன்கள் ஓரளவு வளர்ந்திருக்கும் என்பது திண்ணம்.

எங்கள் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு சந்தேகம். சகமாணவர்களுடன் பேசும் போது எவ்வித தயக்கத்தையும் காட்டாத மாணவர்கள், வகுப்பறையில் பாடம் நடத்தும் போது மட்டும் பேசத் தயங்குவது ஏன்? பள்ளி விழாக்களில் போட்டி போட்டுக் கொண்டு கலந்து கொள்ளும் குழந்தைகள் மேடையில் ஏறும் போது மிரளுவது ஏன்?



புத்தகத்தில் உள்ள பாடங்களைப் பற்றிப் பேசுவது தானே கடினம்; அதைத் தவிர்த்து வேறு எதையாவது பற்றிப் பேசினால்? ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறை மேடை ஏறினால் தானே மிரட்சி; அடிக்கடி மேடையேறும் வாய்ப்பை ஏற்படுத்தினால், அதுவும் ஒருசிலரை மட்டுமல்லாது அனைவருக்கும் அந்த வாய்ப்பு கிடைத்தால்? ஆனால் ஆசிரியர்களின் வேளைப்பளு? எப்படி சமாளிப்பது?

இத்தகைய கேள்விகளுக்கெல்லாம் விடையாகப் பிறந்தது தான் 'பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் மன்றம்'. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக் கிழமையில் இறுதி இரண்டு பாடவேளைகளில் தமிழ்மன்றத்தின் நிகழ்ச்சிகள் நடைபெறும். அந்த வாரத்தில் திங்கட்கிழமையன்று காலைக்கூட்டத்தில் தமிழ்மன்றத்தைத் தலைமையாசிரியர் நினைவு கூறுவார். மாணவர்கள் அந்த வாரம் முழுவதும் தங்களைத் தயார்படுத்திக் கொள்வர். தனியாகவோ குழுவாகவோ தங்கள் நிகழ்ச்சிகளைத் திட்டமிடலாம்; பள்ளி நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; பெற்றோர்களிடமோ, ஆசிரியர்களிடமோ அல்லது அண்டை அயலாரிடமோ உதவிகளைப் பெறலாம். இவையனைத்தும் வகுப்பறை நேரங்களில் நடை-பெறாது. மாணவர்கள் உதவி கேட்டாலொழிய, ஆசிரியர்கள் இத்தயாரிப்புகளில் தலையிட-மாட்டோம்.

நாங்கள் எதிர்பார்த்ததைவிட மாணவர்கள் சிறப்பாகவே செய்கின்றனர். பாரதியார், பாரதிதாசன் போன்றோரின் பாடல்களைப் பாடுதல்,



கதைப்புத்தகங்களை வாசித்துக் கதை கூறல், பொம்மலாட்டம், நாடகம், வில்லுப்பாட்டு போன்றவற்றை நிகழ்த்துதல், விடுகதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல், நடனமாடுதல் என்று மாதாமாதம் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

காலப்போக்கில் ஒன்றாம் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டனர். வகுப்பில் கற்ற பாடல்கள், கதைகள், வீட்டிலிருந்து தெரிந்து வந்த கதைகள், விடுகதைகள் என்று அவர்களும் அசத்தினர். இப்போதெல்லாம் வியாழக்கிழமை கூறினாலே, அடுத்த நாளுக்குள் தயாராகி விடுகின்றனர். இது கூட மாணவர்களே எங்களிடம் வந்து கேட்க ஆரம்பித்து விடுகின்றனர். அதனால் எங்களால் இந்த நிகழ்ச்சியைத் தவிர்க்க முடிவதே இல்லை.



இதன் விளைவாக எம் பள்ளி மாணவர்களுக்கு மேடைபயம் அறவே இல்லை என்றே கூறலாம். பேசும் திறன், தானே கற்றல், மற்ற புத்தகங்களை வாசித்தல், குழுவாகத் திட்டமிட்டு ஒரு நிகழ்ச்சியை நடத்துதல், ஓய்வு நேரங்களைச் சரியாகப் பயன்படுத்துதல், தகவல்களைத் தேடிப் பெறும் முயற்சி, அறிந்தவற்றை மற்றவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துரைத்தல், பல்வேறு கலைகளின் (கதை கூறல், பொம்மலாட்டம், நாடகம், வில்லுப்பாட்டு, நடனமாடுதல்) தங்களின் திறனை மேம்படுத்திக் கொள்ளுதல் போன்ற இன்னும் பல திறன்கள் வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

இங்குப் போட்டிக்கு இடமில்லை. யார் சிறந்தவர் என்ற வாதத்திற்கு வேலையில்லை. தவற்றைத் திருத்த யாருமில்லை. மன அழுத்தத்திற்கோ பயத்திற்கோ அவசியமில்லை. மாணவர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்தத் தடையுமில்லை.

மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்நிகழ்வை நடத்திக் கொண்டிருக்கிறோம். மாதத்தில் இரண்டு மணி நேரம் ஒதுக்கி, மாணவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கும் போது இத்தனை மாற்றங்களை மாணவர்களிடம் காண முடிகிறது என்பது எங்களுக்கு ஆச்சரியத்தை மட்டுமே அளித்தது. மாணவர்கள் கற்றலைத் தங்களின் கையில் எடுக்கும் போது ஆசிரியர்கள் அதற்கான சூழலை உருவாக்கித் தருவதையே நாங்கள் கற்பித்தலாக வரையறுக்கின்றோம்.



சு. கவிதா, தொ.ப.ஆ,
அ.தொ.ப, மணவெளி (அ)

# பள்ளித் தூய்மை பணியில் பெற்றோர்களின் பங்கு

**பெற்றோர்கள் பள்ளியின் ஒரு முக்கிய அங்கம்**

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கடைசி பாடவேளையில் பள்ளியைத் தூய்மை செய்யும் பணியில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஈடுபடுவது அனைவரும் அறிந்ததே. எங்கள் பள்ளியின் மதில் சுவரை ஒட்டி நிறைய செடி கொடிகள் வளர்ந்து படர்ந்து இருந்தன. தொடக்கப் பள்ளி என்பதால் அவற்றைச் சுத்தம் செய்ய பெரிதும் சிரமப்பட்டோம்.

அதேபோல் ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் பெற்றோர் கூட்டம் நடைபெறும். அச்சமயம் கூட்டத்திற்கு வந்த பெற்றோர்களிடம் புதர்போல் வளர்ந்திருந்த செடிகளையும் மரங்களையும் அதன் அருகில் இருந்த மண் புற்றையும் காட்டி அவற்றைச் சீர்செய்ய உதவுமாறு கேட்டோம். மாணவர்களின் பாதுகாப்பற்ற நிலையையும் அவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற சூழல் இல்லை என்பதையும் விளக்கினோம். அன்றிலிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குறைந்தது 4 அல்லது 5 பெற்றோர் எங்களுடன் இணைந்து பள்ளி வளாகத்தைத் தூய்மை செய்தனர். அவர்கள் வரும்போதே கத்தி, மண்வெட்டியுடன் வருவர்.

ஒருவர் குப்பைகளைப் பெருக்கி எடுத்து குப்பைத் தொட்டியில் போடுவது, மற்றிருவர் புதர்களை வெட்டி எறிந்தனர். மற்ற சிலர் மண் புற்றை அகற்றினர். திடீரென்று ஒரு குழந்தையின் அம்மா மரத்தின் மீது ஏறி இடையூறாக இருந்த கிளைகளையெல்லாம் வெட்டி வீழ்த்தினார். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

அடுத்த மாத பெற்றோர் கூட்டம் நடந்தபோது பள்ளி மிகத் தூய்மையாக இருந்தது. கூட்டத்தில் இறுதியாக தூய்மை பணியில் ஈடுபட்ட அனைத்துப் பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்தோம். இப்பணியில் ஈடுபடாத மற்ற பெற்றோர்களுக்கு இது ஓர் உந்துதலாக அமைந்தது. இப்போதெல்லாம் பெற்றோர் கூட்டத்திற்குச் சிறிது முன்னதாகவே வந்து பள்ளியைத் தூய்மை செய்து விட்டு கூட்டத்திலும் கலந்து கொள்கின்றனர்.







**சு. தமிழரசி,** தொ.பா.ஆ,
அ.தொ.ப, தானம்பாளையம்

# கற்றல் திருவிழா

எங்கள் அரசு தொடக்கப்பள்ளி, நோணாங்குப்பத்தில் நடைபெற்ற கற்றல் திருவிழாவைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**கற்றல் திருவிழா**:

12.1.2017 அன்று கற்றல் திருவிழா கொண்டாடப்பட்டது . அன்று காலை பள்ளியே கோலாகலமாக இருந்தது. 5ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் கைத்திறனை கோலத்துடன் வெளிப்படுத்தி இருந்தனர். கோலமிட்ட ஒரு மாணவி, “மிஸ் இந்தக் கோலத்தில் ஆறு சமச்சீர் கோடுகள் வரையலாம்” என்றாள்.



**நோக்கம்**:

எங்களின் நோக்கமே கல்வி செயல்பாடுகளில் மாணவர்களின் இந்த ஆண்டு செயல்பாட்டினை வெளிப்படுத்தச் செய்வது ஆகும்.

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது நான்கு F(A) செயல்பாடுகளைக் காட்சிப்படுத்த வேண்டும் என திட்டமிட்டிருந்தோம். அதன்படி வகுப்பறை அலங்காரம், பொருட்களைக் காட்சிப்படுத்துதல், பணித்தாள்களை வகைப்படுத்துதல் என பரபரப்பாய் நொடிகள் நகரத் தொடங்கின.

**அழைப்பிதழ் தயாரித்தல்**:

கற்றல் திருவிழாவிற்கான அழைப்பிதழ் தயாரிக்கப்பட்டு பள்ளித் துணை முதல்வர், பள்ளித் துணை ஆய்வாளர், மற்றும் பெற்றோர்களும் முன்பே அழைக்கப்பட்டிருந்தனர்.

**நிகழ்ச்சி தொடக்கம்**:

சிறப்பு விருந்தினர்கள் வரத் தொடங்கியதும் மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.



அரசுப் பள்ளிகளின் மாணவர் சேர்க்கை குறித்த சிறு விழிப்புணர்வு நாடகத்துடன் துவங்கியது. கற்றல் திருவிழா பின்னர் ஐந்தாம் வகுப்பு மாணவிகள் பெண்கல்வி குறித்த ஒரு பாடலைப்பாடினர்.

**விருந்தினர் பார்வையிடல்**:

பின்னர் ஒவ்வொரு வகுப்பாக பார்வையிட சிறப்பு விருந்தினர்களும், பெற்றோரும் தயாராகினர்.

செயல்திட்டங்கள் சிறு அறிவியல் சோதனைகள், நாடகங்கள், பாடல்கள், வில்லுப்பாட்டு, உரையாடல்கள், செயல்பாடுகளை விவரித்தல், தனி

நடிப்பு, மாதிரிகளை காட்சிப்படுத்துதல் என வகை வகையான கற்றல் வெளிப்பாடுகளால் பள்ளி முழுவதும் ஆரவாரத்துடன் இருந்தது.

குழந்தைகள் தன் நண்பர்களின் பெற்றோருடன் தங்கள் செயல்பாடுகளைப் பகிர்ந்து பெருமிதம் அடைந்தனர். பெற்றோரும் தங்கள் குழந்தைகளின் கற்றல் அடைவைக் கண்ணெதிரே கண்டதில் பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

பள்ளித்துணை ஆய்வாளரும் ஒவ்வொரு வகுப்பாக சென்று மாணவர்களிடம் உரையாடி அவர்களின் கற்றல் வெளிப்பாடுகளைக் கண்டு இரசித்தார்.

**பிரதிபலிப்பு**:

ஒட்டுமொத்தமாக இவ்விழாவின் மூலம் இந்த ஆண்டு முழுவதும் வகுப்பில் நடைபெற்ற கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளின் பிரதிபலிப்பை கண்கூடாகக் காண முடிந்தது.








**க.சுபாஷினி,** தொ.ப.ஆ.,

அ.தொ.ப., நோணாங்குப்பம்

# உலகத் தாய்மொழி தின கொண்டாட்டம்

**புத்தகத்தைக் கடந்த கற்றல் இனிமையே**



உலகில் வாழ நீர், வாழ, உணவு, உடை, இருப்பிடம் எவ்வளவு அவசியமோ அதுபோல் தாய்மொழியும் மிக மிக அவசியமானது. எந்த மொழியாக இருப்பினும் தாய்மொழி என்று ஒன்று அனைவருக்கும் உண்டு. அவரவர் தாய்மொழி அவரவர்க்கு உன்னதமானது. உலக மொழிகளிலேயே மிகப் பழமை வாய்ந்தது நம் தமிழ் மொழி. இனிமை, வளமை, புதுமை, தூய்மை, என அனைத்தும் சேர்ந்த நம் தாய்மொழி தமிழைக் கொண்டாடச் சரியான வாய்ப்பு கிடைத்ததை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டோம்.

ஒருநாள் கொண்டாடினால் போதாது ஒரு வாரம் கொண்டாட முடிவெடுத்தேன். காலைப் பேரவையில் தாய்மொழி தினம் பற்றிக் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறினேன். பின்னர் மொழியின் அவசியம் பற்றி எடுத்துக் கூறினேன். எழுத்துகள் ஒட்டப்பட்ட அட்டையைக் காண்பித்து எழுத்தும் ஒலியும் மொழியாகாது. பொருள் தர வேண்டும் என்பதை விளக்கி நம் தமிழின் சிறப்புகளை எடுத்துக் கூறினேன். ஒரு எழுத்து மாறினாலும் பொருள் மாறுபடும். எனவே நம் தமிழைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் முயற்சி செய்ய வேண்டும் என்று எடுத்துக் கூறினேன்.

பின்னர் படம் வரையப்பட்டு அதைப்பற்றி எழுதிய வரைப்பட அட்டையை காண்பித்துக் குழந்தைகளைப் படிக்கச் செய்தேன். இதுபோல் நாளை உங்களுக்குப் பிடித்ததைப் பற்றி வரைந்து அதைப்பற்றி ஐந்து வரிகள் எழுதிவர வேண்டும் என்று அறிவுறுத்தினேன். குழந்தைகள் மிக அழகாக மறுநாள் எழுதி எடுத்து வந்தனர். ஒரு சிலர் மட்டுமே எழுதி வருவார்கள் என்று நினைத்தேன். ஆனால் நான் நினைத்ததிற்கு மேலாக குழந்தைகளின் பங்கேற்பு அதிகமாக இருந்தது. மிக்க ஆர்வத்துடன் எழுதி வந்தது மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

இன்று என்ன செய்யலாம் என்ற வினா எழுப்பினேன். பாடல் எழுதலாம் என்று ஒரு மாணவர் பதில் அளித்தான். எப்படி எழுதுவது என்று இன்னொருவரிடமிருந்து கேள்வி எழுந்தது.

**"இது குழந்தைகளின் முதல் முயற்சியாயிற்றே. அவர்களுக்குச் சொல்ல முடியாத ஆர்வமும் மகிழ்ச்சியும் இருந்ததைப் பார்த்தேன்."**

சரி இப்பொழுதே ஒரு பாடல் எழுதலாம் என்று கூறி ஆசிரியர் திரு நாகராசன் அவர்களை முதல் வரி கூறச் சொன்னேன். அவர் மரம் அசைந்ததால் காற்று வந்தது என்று கூறினார். அடுத்த வரி யார் கூறுகிறீர்கள் என்று கேட்டதும் சபரி காற்று வந்ததால் இலைகள் ஆடின என்றான். ரூபேஷ் குளு குளுன்னு இருந்துச்சு என்றார். இதுதான் பாடல். இப்படித்தான் முயற்சி செய்ய வேண்டும் என்று கூறினேன்.

தொடர்ந்து பளபளக்கும் பட்டாம்பூச்சி என்றும் வண்ண வண்ண பட்டாம்பூச்சி, அழகான பட்டாம்பூச்சி, படபடன்னு சிறகை அடிக்கும் பட்டாம்பூச்சி, எனக்குப் பிடித்த பட்டாம்பூச்சி என்று ஒவ்வொருவராகக் கூறினர். எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

அதோடு முடிக்காமல் சிக்கு புக்கு ரயிலு என்றதும் கடகடன்னு ஓடுது பார், ரயிலுல ஒரு கூத்துப் பாரு என்றனர்.

இதைப்போல உங்களுக்குப் பிடித்த பாடல் எழுதி வரவேண்டும். புத்தகத்தைப் பார்த்து எழுதிவரக் கூடாது என வலியுறுத்திக் கூறினேன்.

மறுநாள் குழந்தைகள் தங்களால் முயன்றவரை பாடல் எழுதி வந்தனர். இது குழந்தைகளின் முதல் முயற்சியாயிற்றே. அவர்களுக்குச் சொல்ல முடியாத ஆர்வமும் மகிழ்ச்சியும் இருந்ததைப் பார்த்தேன். அடுத்த நாள் பள்ளி வாசலில் நான் நுழையும்போதே தமிழ் படைப்புகளை என்னிடம் காட்டினர். ப்ராஜெட் செய்யச் சொன்னால் செய்யாமல் வருவர், பலமுறை சொல்ல வேண்டிய சூழலில் இருக்கிறோம். ஆனால் அன்றோ பல பாடல்களைக் குழந்தைகள் எழுதி வந்தனர். கேஜி பிள்ளைகள் கூடத் தங்கள் பெற்றோர்களுடன் சேர்ந்து படம் வரைந்து எழுதி வந்தது அவர்களின் ஆர்வத்தை என்னால் முழுவதும் உணர முடிந்தது.

இந்த நிகழ்ச்சி ஆசிரியர்களுக்கு மாணவர்களின் எண்ண ஓட்டங்களையும், ஆழ்ந்த அனுபவங்களையும் படைப்பாற்றலையும் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் மாணவர்களின் பேசும் திறனையும் எழுதும் திறனையும் வளர்க்க ஒரு ஊடகமாகவும் அமைந்தது என்று கூறினால் அது மிகையாகாது. புத்தகத்தையும் வகுப்பறையையும் கடந்து கற்றல் சூழல்களை உருவாக்கும்போது கற்றலும் கற்பித்தலும் இனிமையாகிறது.



**மு. சாந்தகுமாரி,** தொ.ப.ஆ.,
அ.தொ.ப, வடுவக்குப்பம்

# உலகத் தாய்மொழி தினம்

எங்கள் பள்ளியில் (22.02.2017) அன்று காலை மாணவர்களுக்கான பல்வேறு தாய்மொழி விளையாட்டுக்கள் (திருக்குறள் ஒப்புவித்தல், சொல் விளையாட்டு, வாக்கியத்தை முறைபடுத்துதல், எழுத்துக்களை வரிசைபடுத்துதல்) நடத்தப்பட்டன.

மேலும் தமிழ் மொழியை செம்மைப் படுத்தும் வகையில் தமிழ்ப் புலவர்களின் படங்கள் மற்றும் பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் மாணவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. கதை, பாடல், கவிதை, ஆகியப் பகுதிகளில் மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டனர். மேலும் மாணவச்செல்வங்கள் தாய்மொழி தோன்றிய வரலாற்றை அருமையாகக் கூறினர்..

நமது பண்பாட்டு கலாச்சாரத்தைப் பறைசாற்றும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. கலைநிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் கலைத்திறனை மேம்படுத்தும் வகையில் வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை, புலியாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், கும்மி, கோலாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், பாம்பாடம் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை மாணவர்களுடன் ஒருங்கிணைந்து எமது பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து செம்மையாக செய்திருந்தனர். இதோ நிகழ்ச்சியில் இருந்து சில படங்கள் உங்களுக்காக:






**க. சண்முகப்ரியா**, தொ.ப.ஆ.
அ.உ.ப. கொடத்தூர்

# பேனா நண்பர்கள்

**கடிதம் எழுதுவோம்; கடல் கடந்து கருத்தாடுவோம்.**

கடிதம் எழுதுவதும் ஒரு கலையே. எதைப்பற்றி எழுதுகிறோம், யாருக்கு எழுதுகிறோம், எத்தளம் வழியாக அனுப்புகிறோம் போன்றவற்றைப் பொருத்து நமது அனுபவங்கள் மாறுபடும். ஒரு காலத்தில் நண்பர்களின் அல்லது உறவினர்களின் கடிதங்களுக்காகக் காத்திருக்கும் சுகமே தனி. அதிலும் வேறொரு நாட்டிலிருக்கும் ஒருவருக்குக் கடிதம் எழுதுவதும் பதிலுக்காகக் காத்திருப்பதும் அலாதியான இன்பம். எங்கள் பள்ளியிலும் இத்தகைய ஒரு அனுபவம் என் வகுப்புக் குழந்தைகளுக்குக் கிடைத்தது. எம் பள்ளிக் குழந்தைகள் மற்ற நாட்டு மாணவர்களுக்கு ஈமெயில் மூலம் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். ஒரு இணைதளம் இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

**இணையதளத்தில் எவ்வாறு இணைவது?**

<https://go.penpalschools.com> என்ற இணையதளம் மாணவர்களை உலகளவில் இணைக்கும் ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் தங்கள் ஈமெயில் ஐடியைப் பயன்படுத்தி முதலில் தங்கள் வகுப்பைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் class code அளிக்கப்படும். அந்த எண்ணைப் பயன்படுத்தித் தங்கள் வகுப்பு மாணவர்களையும் இந்தத் தளத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்வதற்கான கடைசி தேதியும் அந்த இணைய தளத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கும். பதிவுசெய்யப்பட ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களாகவே வெவ்வேறு நாடுகளிலிருந்து பேனா நண்பர்களை அறிமுகம் செய்து வைப்பர்.

மேலும் மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் எந்தத் தலைப்பில் தங்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்ற தகவலும் அதில் கொடுக்கப்பட்டிருக்கும். இம்முறை தங்களைப்பற்றி, உணவு, வரலாறு, கலாச்சாரம், தற்போதைய கலாச்சாரம், பிரதிபலிப்பு என வாரத்திற்கு ஒன்றாக ஆறு தலைப்புகளில் மாணவர்கள் கடிதப் பரிமாற்றம் செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. வெறும் தலைப்புகள் மட்டுமே மாணவர்களுக்குப் போதுமானதாக இருக்காதல்லவா? அதனால் ஒவ்வொரு வாரத்தின் தலைப்புக்கேற்ற பாடப்பொருளையும் வீடியோவையும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் கொடுத்துள்ளனர். இவை மாணவர்களின் புரிதலுக்குப் பேருதவியாக இருக்கும்.

**முதல் வாரம் - என்னைப் பற்றி**

வகுப்பறையில் அறிமுகம்:

இந்தச் செயல் திட்டத்தை முதலில் எங்கள் தலைமை ஆசிரியரிடம் கூறினேன். எந்த ஒரு புதிய முயற்சிக்கும் மறுப்பு தெரிவிக்காத எங்கள் தலைமையாசிரியர், இதற்கும் அனுமதியளித்தார். எனது மாணவர்களிடம் கூறியபோது, “வெளிநாட்டிலிருந்து நண்பர்களா?” என்று துள்ளிக் குதித்தனர். ஆனால் கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்றதும் அவர்களின் ஆர்வம் சற்று குறையத்தான் செய்தது. இருந்தாலும் அவர்கள் முயற்சி செய்யலாம் என்றனர். எனவே நாங்கள் அனைவரும் இந்தச் செயல் திட்டத்தில் இணைய முடிவெடுத்தோம்.

**செயல் திட்டத்தில் இணைதல்:**

மேற்கூறியவாறு இணைய தளத்தில் இணைந்து கொண்டோம். வகுப்பறையில் வீடியோவைப் போட்டுக் காட்டினேன். ஒவ்வொரு நாட்டிலும் காலை நேரம் எவ்வாறு மாறுபடுகிறது, பள்ளி நேரங்களில் ஏன் மாற்றம், பொழுதுபோக்கு எவ்வாறு மாறுபடுகிறது போன்ற தகவல்களை அளித்தன இந்த வீடியோவும் கட்டுரையும். எதை

எழுதலாம் எப்படி எழுதலாம் என்ற யோசனை மாணவர்களுக்கு மட்டுமல்ல எனக்கும் கிடைத்தது.

**கடிதம் எழுதுதல்:**

கடிதம் எழுதும் முன் அந்தத் தலைப்பைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடினோம். வீடியோ பார்த்தோம். தேவையான புத்தகங்களை, செய்திகளை, தகவல்களைப் படித்தோம். முதலில் மாணவர்கள் குழுவில்



அமர்ந்து தாங்கள் எழுதப் போவதைப் பற்றி விவாதித்தனர். பின் எழுதினர். எழுதி முடித்ததும் இருவர் இருவராக அமர்ந்து ஒருவர் மற்றொருவரின் கடிதத்தைப் படித்து விமர்சனம் தந்தனர். திருத்தங்கள், மாற்றங்கள் நடைபெறும். கடிதத்திற்கு இறுதி வடிவம் கிடைத்த பிறகு என்னிடம் வருவார்கள். நான் படித்து ஏதேனும் விளக்கங்கள், திருத்தங்கள் தேவைப்படின் சொன்னால் மீண்டும் எழுதிக் கொண்டு வருவார்கள்.

**ஆங்கிலத்தில் எழுதுதல்:**

இந்த இடத்தில் மாணவர்களுக்கு அதிக உதவி தேவைப்பட்டது. அக்காவுக்கு இங்கிலீசுல என்னன்னு எழுதுரது? பிரண்டு எப்படி எழுதறது? ரொம்ப பிடிக்கும் எப்படி எழுதனும்னு எழுதித் தரீங்களா? என்று அனைவரும் கேட்க ஆரம்பித்தனர்.




ஒவ்வொருவரும் கேட்ட வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுதி உரக்க வாசித்துக் காட்டினேன். இருவர் இருவராக அமர்ந்து எழுதத் தொடங்கினர். மற்றவர்களிடம் கேட்டனர், என்னிடம் ஓடிவந்தனர். எனது வகுப்பறை வித்தியாசமாகச் செயல்படுவதைக் கவனித்தேன். பொதுவாக நான் தான் அவர்களைப் படிக்குமாறு சொல்லிக் கொண்டிருப்பேன். ஆனால் இன்றோ அவர்கள் என்னிடம் ஓடிவந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

**பிழை திருத்தம்:**

ஒரு குழுவின் கடிதம் மற்ற குழுவில் உள்ள மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். அவர்களும் மிகுந்த சிரமத்தோடும் சிரத்தையோடும் படித்துப் புரிந்துகொள்ள முயன்றனர். 36 மாணவர்களின் 4 மாணவர்கள் தவிர மற்றவர்களால் ஓரளவு எழுத முடிந்தது.

பிறகு அனைத்து கடிதங்களும் என்னிடம் வந்தன. நான் சிறு சிறு திருத்தங்களை மட்டுமே கூறினேன். பிறகு புதிய படிவத்தை எழுதி படங்களையும் வரைந்தனர்.

**இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல்:**

மாணவர்கள் எழுதிய கடிதத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தேன். அவர்களின் நண்பர்கள் எழுதியிருந்த தகவல்களை அச்செடுத்து மாணவர்களிடம் வாசிக்கக் கொடுத்தேன்.




**நண்பர்களின் கடிதத்தை வாசித்தல்:**

கடிதங்களைப் பார்த்ததும் மகிழ்ச்சி, ஆரவாரம், ஆச்சர்யம், பயம், கர்வம் என உணர்ச்சிகளின் கலவையாக இருந்தது மாணவர்கள் மட்டுமல்ல

ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் தான். மாணவர்கள் தங்களின் நண்பனின் பெயரையும் ஊரையும் பலமுறை வாசித்துப் பார்த்தனர். மற்ற மாணவர்களின் கடிதங்களைக் காட்டினர். மற்ற ஆசிரியர்களிடம் காண்பித்தனர். நண்பனின் பெயரை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தனர். வானத்தில் பறப்பது போன்று உணர்ந்தேன்.

**இதன் விளைவு:**

இதைப்போலவே ஒவ்வொரு முறையும் உணவு, வரலாறு, கலை, கலாச்சாரம் என்று அடுத்தடுத்த தலைப்புகளில் கடிதங்களை எழுதினோம். வரலாறு, கலை போன்ற தலைப்புகளில் கடிதம் எழுத அரிக்கன்மேடு மற்றும் பாரதியார் பல்கலைக்கூடம் ஆகிய இடங்களுக்குக் களப்பயணம் சென்று வந்தோம். ‘எவ்ளோ நேரம் ஆகும்னு வேற வேல இல்லயா’ சொல்றதெல்லாம் காதுல விழுதுதான். ஆனால் இந்த கடிதம் எழுதுதல் மூலம் நானும் எனது மாணவர்களும் அடைந்த பயன்கள் அப்பப்ப்பா..

முதல் கடிதம் எழுதும் போது நண்பர்களுக்கு கடிதம் என்ற அளவிலேயே தொடங்கியது. முதல் முறை எழுதிய போது நிறைய சந்தேகங்கள், புதுப்புது வார்த்தைகளை அறிதல், படித்துப் பார்த்தல் என்றே சென்றது. ஆனால் அவர்களுக்கு வந்த கடிதங்களை நேரில் காட்டிய போதும் நகல் எடுத்து கையில் கொடுத்தபோதும் மாணவர்கள் அடைந்த மகிழ்ச்சியையும் வியப்பையும் விவரிக்க வார்த்தைகளே இல்லை.

தங்களுக்குள் பேசிக்கொள்வது உலக உருண்டையில் தன் நண்பர்களின் இருப்பிடத்தை அறிவது, அவர்களின் பெயரைப் படித்து என் நண்பர்கள் இப்படி எழுதி இருக்காங்க உன் நண்பர் என்ன சொன்னான்? நீல கண்ணா, காவ்யா அது எப்படி இருக்கும்? என அவர்களுக்குள்ளாகவே கற்றல் நிகழ்ந்து கொண்டு இருந்தது. படித்த செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். தங்கள் சூழ்நிலையோடு ஒப்பிட்டு பார்த்தனர்.

ஒரு மாணவி தம் தோழி தன்னைப்பற்றி எழுதியதை வைத்துப் படமாக வரைந்து அனைவருக்கும் காட்டினாள். மிஸ் எல்லோருக்கும் நிறைய எழுதி இருக்காங்க. எனக்கு மட்டும் இரண்டே வரில ஏன் மிஸ் எழுதி இருக்காங்க என்ற கேள்வியும் வந்தது.

உணவு பற்றி எழுதிய போது மாணவர்களுக்கு வந்த கடிதங்கள் சுவராசியமாக இருந்தன. “Hot dog ன்னா என்ன மிஸ்? இது என்ன சாப்பாடுன்னே தெரியல மிஸ். நாங்க ஒரு பக்கம் எழுதறோம், ஆனால் அவங்க மட்டும் ஏன் ஒரு வரி இல்ல ரெண்டு வரி எழுதராங்க?” என்று ஏராளமான கேள்விகள்.

அதேபோல் அமெரிக்காவில் உள்ள மாணவர்கள் “நீ எழுதுற ஸ்டைல் நல்லா இருக்கு. காரக்குழம்பு என்றால் என்ன? கொழுக்கட்டையா அப்படின்னா? கூழ் எப்படி செய்வீங்க?” போன்ற கேள்விகள் எங்களுக்கு வேடிக்கையாக இருந்தன.

ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும் போது மாணவர்களின் மொழித்திறன் மேம்பட்டுக்கொண்டே சென்றது எனில் அது மிகையில்லை.

முதல் முறை கடிதத்தைப் படிக்க அதிகமாக எனது உதவியை நாடிய மாணவர்கள் எண்ணிக்கை ஒவ்வொரு முறையும் படிப்படியாகக் குறைவதைக் கவனித்தேன்.

ஆரம்பத்தில் ஓரிரு வரிகளில் எழுதிய அமெரிக்க மாணவர்கள், நமது மாணவர்கள் எழுதிய கடிதங்களைப் பார்த்தபின் அவர்களும் அதிகமாக எழுத ஆரம்பித்து விட்டனர்.

வரலாறு, கலாச்சாரம் பற்றி எழுதுவதற்காக அரிக்கன்மேடு, பாரதியார் பல்கலைக்கூடம் சென்று வந்தோம். அங்கு கிடைத்த தகவல்களைக் கொண்டு கடிதம் எழுதினர். இக்களப்பயணம் வாயிலாக எங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை இவ்விதழில் வேறொரு கட்டுரையில் எழுதியுள்ளேன்.



**சு. கவிதா,** தொ.ப.ஆ,
அ.தொ.ப, மணவெளி (அ)

# களப்பயணம் செல்வோம்

**அரிக்கன்மேடு**

ஐந்தாம் வகுப்பில் ‘களப்பயணம் செல்வோம்’ என்ற பாடத்திற்காகக் களப்பயணம் செல்லலாம் என திட்டமிட்டோம். எங்கே போகலாம் என கலந்துரையாடிய போது, எங்கள் பள்ளிக்கு அருகில் உலகப் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அரிக்கன்மேடு பகுதிக்குச் செல்லலாம் என முடிவு செய்தோம். இதுவரை அவ்விடத்தைப் பார்த்திராததால், பார்த்தே ஆக வேண்டும் என்ற எனது பேராவலும் அதில் சேர்ந்து கொண்டது.

**ஆசிரியருக்கு வழிகாட்டிய மாணவி**

நான் அங்கு இதுவரை சென்றதில்லை என்பதால் யாரேனும் போயிருக்கிறீர்களா என்றதற்கு இரண்டு மாணவர்கள் நான், நான் என்று உற்சாகத்துடன் முன் வந்தனர். அடிக்கடி அங்குச் சென்று விளையாடி விட்டு வருவோம் என்று கூறிய அறிவுமதியுடன் எனது பயணம் தொடங்கியது.



தலைமையாசிரியர் அனுமதியுடன் நானும் எனது வழிகாட்டி ஆசிரியருமான (அறிவுமதி) அரிக்கன்மேடு பகுதிக்குச்சென்றோம். அங்குக் (தொல்பொருள்) கலை பண்பாட்டுத்துறை அலுவலகர் திரு. இரமேஷ் அவர்கள் எங்களிடம் ஆர்வமாக அரிக்கன்மேட்டின் வரலாறு மற்றும் சிறப்புப் பற்றி கூறினார். அவர் அரிக்கன்மேட்டைப் பற்றிப் பல வீடியோக்கள் வைத்திருப்பதாகக் கூறினார். எங்கள் பள்ளிக்கு வர முடியுமா எனக் கேட்டவுடன் வருவதாக ஒப்புக்கொண்டார். மேலும் அரிக்கன்மேட்டில் அவருக்குக் கிடைத்த பல பொருட்களைப் காட்சிப்படுத்த எடுத்துக்கொண்டு வருவதாகவும் கூறினார்.

களப்பயணம் செல்லும் நாள் வந்தது. திரு. இரமேஷ் அவர்கள் காட்சிப்படுத்திய பழங்காலப் பொருட்களை மாணவர்கள் பார்வையிட்டனர். பிறகு



அவர் அரிக்கமேடு தொடர்பான செய்திகளைப் பகிர்ந்து கொண்டே மூன்று வீடியோக்களைக் காட்டினர். அதன் பின் எங்களின் களப்பயணம் ஆரவாரத்துடன் தொடங்கியது.

மாணவர்கள் இரண்டு இரண்டு பேராக நடை பயணமாகக் கண்ணில் படுவதை ரசித்துக் கொண்டு மகிழ்ச்சியாக நடந்தனர். நான்கு ஆசிரியர்கள் உடன் நடந்தோம். அங்குச் சென்றவுடன் சுற்றி சுற்றி வந்தனர். கூடி அமர்ந்தனர். தின்பண்டங்களைச் சாப்பிட்டனர். அரை வட்டமாக அமர்ந்தனர். ஆசிரியர் மாணவர்களிடம் நீங்கள் என்னென்ன கேள்விகளைக் கேட்கப் போகிறீர்கள் என்று கேட்ட போது ஒட்டுமொத்தமாக 48 கேள்விகள்

குவிந்தன. ஆனால் அவையனைத்தையும் கேட்க நேரம் போதவில்லை. இதனிடையில் எங்கள் பள்ளித்துணை ஆய்வாளர் ஐயா அவர்கள் எங்களுடன் இணைந்து கொண்டார்.



மாணவர்கள் கேள்விக் கணைகளைச் சரமாரியாகத் தொடுக்க திரு. இரமேஷ் அவர்கள் சளைக்காமல் பதிலளித்தார். DIS III அவர்களும் கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றுக் கொண்டார்.

பிறகு Back water river பகுதிக்கு மாணவர்களை அழைத்துச் சென்றோம். சதுப்பு நிலக் காடுகள் வகை மரங்களைப் பார்வையிட்டனர். பள்ளிக்குத் திரும்பினோம். பயணக்கட்டுரை எழுதினர்.



**இப்பயணத்தில் எனது நினைவுகள்**:

கற்றல் என்பது எங்கேயும், எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கும் என்பது எனது கருத்து. அதை மீண்டும் உணர்த்தியது இப்பயணம்.

எவ்வாறு களப்பயணம் செல்லும் முன் மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தேன். Water bottle, snacks, discipline பற்றிச் சொல்ல வரவில்லை. எங்குச் செல்கிறோம்? எப்படிச் செல்கிறோம்? எவ்வாறு செல்கிறோம்? எதற்காகச் செல்கிறோம்? செல்லும் வழியில் காண்பவை யாவை? என்பது பற்றி எல்லாம் முன்பே உரையாடினோம்.

களப்பயணம் வெறும் சம்பிரதாயமாகவோ, மகிழ்ச்சி-யாகவோ மட்டுமே என்றில்லாமல் கற்றலோடு தொடர்பு படுத்துவதில் கவனமாக இருந்தேன்.

எனது வழிகாட்டி மாணவி இது இப்படி மிஸ், எனக்கு வழி தெரியும் மிஸ், இங்கு நரி வரும், இங்க தண்ணி ரொம்ப ஆழம், இங்க ஈசியா இறங்கலாம், இப்படியும் போலாம் மிஸ், இங்க மயில்லாம் வரும் என என்னை வியப்பில் ஆழ்த்தினாள். அவள் ஒரு தகவல் களஞ்சிமாகத் தெரிந்தாள். மாணவர்களுக்குப் பெரிதாக என்ன தெரியும்? நாம் தான் சொல்ல வேண்டும் என்ற பெரும்பாலோரின் எண்ணங்களைத் தவிடு பொடியாக்கியது.

திரு. இரமேஷ் காட்டிய பொருட்களைத் தொட்டுத் தடவிப் பார்த்தனர். என்ன என்று யோசித்தனர், எப்படி செய்திருப்பர், எதற்குப் பயன்படுத்தியிருப்பர் என சிந்திக்கத் தொடங்கினர். தாங்களாகவே என்னவாக இருக்கும் எனக் கற்பனை செய்து கலந்துரையாடினர்.

படித்த பாடத்தைக் கட்டுரையாக மாற்றுவதை விட கேட்டுப் பார்த்து உணர்ந்த செய்திகளைக் கட்டுரையாக மாணவர்கள் எழுதியது மனநிறைவாக இருந்தது.

**பாரதியார் பல்கலைக்கூடம்**

கற்றல் இனிமையாக நடைபெற கற்றல் அனுபவங்களை ஏற்படுத்தி தருவது நமது பொறுப்பு அல்லவா? பென்பால் ஸ்கூல் பிராஜெட் திட்டத்தில் கலை, மொழி, என்ற தலைப்பில்



நான்காவது வாரத்தில் மாணவர்கள் ஈமெயில் மூலம் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தான் நமது கலைகள்

பாடல்கள், பாரதியார், பாரதிதாசன் தெரியும் என்று எண்ணி மாணவர்களை இது தொடர்பாக எழுதுங்கள் என்று சொன்னால் நன்றாக இருக்காது அல்லவா? எனவே எங்கள் பள்ளிக்கு அருகில் இருக்கும் பாரதியார் பல்கலைக்கூடத்திற்குச் செல்லலாம் என திட்டமிட்டு முன் அனுமதி பெற்று பயணமானோம்.

அங்குச் சென்று இறங்கியதும் மாணவர்கள் முகத்தில் வியப்பு, பரவசம், மகிழ்ச்சி, ஆச்சரியம் என உணர்ச்சிகள் பிரதிபலித்தது. “மிஸ் எவ்ளோ மரம் பாருங்க மிஸ், எவ்ளோ பெரிய இடம் இல்ல மிஸ், மரத்தில சில பாருங்க, மாடு சில பாருங்க மிஸ்”, என மாணவர்கள் மகிழ்ச்சியான குரல் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது.

எங்களுக்கு முன் அனுமதி பெற்றுத் தந்த திரு. ஐயப்பன் அவர்களைச் சந்தித்தோம். அவர் எங்களுக்கு நாங்கள் பார்க்க வேண்டிய துறையினரையும் அறிமுகப்படுத்தி எங்களுடன் பயணித்து குறிப்பிடத்தக்கது.

**நடனத் துறை:**

முதலில் பரத நாட்டிய வகுப்பிற்குச் சென்றோம். மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் கேட்க வேண்டிய கேள்விக்கணைகளுடனும், நோட்பேட், பென்னுடன் நேர்முகப் பேட்டி காண்பது போல் அமர்ந்திருந்தனர். முதலில் நடன் மாணவிகள் ஆடிய நடனத்தை



மகிழ்ச்சியுடன் பார்த்தனர். (தாங்கள் பெரிய விஐபி கள் என்ற என்ணத்துடனேயே என் குழந்தைகள் நாள் முழுவதும் வலம் வந்ததைப் பார்த்த போது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது) பரத நாட்டிய பேராசிரியர் பரத்தத்தின் வரலாறு, பாவங்கள், முத்திரைகள் பற்றியும் கூறினார். மாணவர்கள் அவர்களிடம், எப்பொழுதிலிருந்து நடனம் ஆடுகின்றனர்? பரத நாட்டியத்தில் புகழ் பெற்றவர் யார்? ஏன் முத்திரைகள்? எனக் கேள்விகளை அடுக்கினர்.

எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லச் சொல்ல மாணவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர். பிறகு நாட்டிய மாணவர்கள் மீண்டும் நடனம் ஆடிக்காட்டினர். பிறகு எங்கள் மாணவர்களுக்கு சில நடன் அசைவுகளைக் கற்றுத் தந்தனர். எம் மாணவர்கள் எங்களுக்கும் நடனம் தெரியும் என்று பள்ளி ஆண்டு விழாவில் அவர்கள் ஆடிய நடனத்தை ஐந்து நிமிடம் ஆடிப் பாராட்டுதலைப் பெற்றனர். மிஸ் நாங்க +2 படிச்சிட்டு இங்க வரப்போறோம் மிஸ் என்றனர். எனக்கு அதிர்ச்சி ஆச்சரியம்.

**இசைத் துறை:**

தொடர்ந்து கர்நாடக சங்கீத வகுப்பிற்குச் சென்றோம். அங்கு இரண்டு பேராசிரியர்கள் மாணவர்களிடம் இசை என்றால் என்ன? எனக் கேள்வி எழுப்பி மாணவர்களைத் தங்களுடன் கலந்துரையாடச் செய்தனர். சரளமாகக் கேள்விகள் கேட்டுப் பதில்களை மாணவர்கள் தங்கள் நோட்பேடில் பதிவு செய்தனர். ஸ்ருதி, லயம், தாளம், போன்றவற்றைப் பற்றிக் கூறி மாணவர்களும் சரிகமபதநி, தக திமி, தக ஜனு என மூன்று கட்டை வரை சொல்லிக் கொடுத்தனர்.

திருக்குறளை ராகமாகப் பாடுங்க சார் என்று கேட்டவுடன் திருக்குறளை ராகமாக பாடி, மாணவர்களும் திரும்பப் பாடினர். இன்று வரையும் கூட தக திமி தக ஜனு என யாராவது ஒருவர் பாடிக்கொண்டே இருக்கின்றனர்.

**சிற்பத்துறை:**

பிறகு சிற்பக் கலை பிரிவிற்குச் சென்றோம். இம்முறை எங்களுக்கு சிற்பவியல் மூன்றாமாண்டு மாணவர் இராஜா எங்களுக்கு வழிகாட்டியாய் உடன் வந்தார்.

Sheet meta என்ற பிரிவிற்குச் சென்றோம். பல்வேறு உருவங்களைச் செதுக்கி சீட் மேட்டாவில் அச்சு எடுத்துக் கொண்டிருந்தனர். இங்கு மாணவர்கள் ஆராய்ச்சி நோக்கோடும் தேடலோடும் சுற்றி

நின்று உற்று நோக்கினர். டெரகோட்டா எங்கே அண்ணா என்று அவர்களே சகஜமாக உரையாடத் தொடங்கினர். சுடுமண் சிற்பங்கள் என்று கூறி அங்கு வைக்கப்பட்டிருந்த சில மாதிரிகளையும்



காட்டினார். "அண்ணா, நீங்க செஞ்சா உடையல, நாங்க செய்யற களிமண் மட்டும் உடையுதே ஏன்?" என்று கேட்டனர். அங்கு இருந்த மற்றொரு மாணவர் காற்று உள்ளே போகாத மாதிரி செய்யனும் என்று கூறி மாணவர்களுக்கு ஒரு அழகிய பூ ஜாடி செய்து காட்டினார். நாம் பாடம் எடுப்பதைக் கவனிப்பதை விட நுணுக்கதோடும் ஆர்வத்தோடும், முழு ஈடுபாட்டோடும் கவனித்தனர். ஆம் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தினால் கற்றல் சிறப்பாகவே அமையும் என்பதை மீண்டும் உணர்ந்தேன்.

மற்றொரு அறையில் ஒரு அம்மா நாற்காலியில் அமர்ந்து கொண்டு இருந்தார். ஒரு மாணவர் அவர்களைப் பார்த்து களிமண்ணில் சிற்பம் செதுக்கிக் கொண்டு இருந்தனர். இங்கேயும் தொடங்கியது கேள்வி யுத்தம்.

ஏன் உட்கார்ந்து இருக்காங்க?

எவ்ளோ நேரம் உட்கார்ந்து இருக்காங்க?

அசையவே கூடாதா?

சாப்பிடப் போக மாட்டாங்களா?

எனக் கேள்விகளின் பட்டியல் நீண்டது. பொறுமையாகப் பதில் அளித்த பின் மீண்டும் காந்தி, நேரு, அப்துல்கலாம், எம்.ஜி.ஆர் எல்லாம் எப்படிச் செய்றீங்க எனக் கேட்டனர்.

புகைப்படத்தைப் பார்த்துச் செய்வோம் என்றனர். களிமண்ணில் செய்து அச்சு எடுத்து பைபர் அல்லது பிளாஸ்டர் சிலை செய்வோம் என்றனர். கிட்டத்தட்ட 24 துறைகளில் 3 துறைகளை மட்டுமே பார்வையிட நேரம் இருந்தது. எனவே எங்களது களப்பயணம் முடிவுக்கு வந்தது.

இப்பயணத்தில் மாணவர்கள் பல தகவல்களைத் தெரிந்து கொண்டனர். உற்றுநோக்கவும், வினா எழுப்பவும் செய்கின்றனர். தேவையான செய்தி கிடைக்கும் வரை தொடர்ந்து முயற்சி செய்தனர்.

பெற்ற அனுபவங்களைத் தமிழில் பயண கட்டுரையாகவும் பென்பால் ஸ்கூல் ப்ராஜெட்டுக்காக ஆங்கிலத்தில் ஈமெயிலும் எழுதினர்.



**சு. கவிதா,**
தொ.ப.ஆ, அ.தொ.ப.
மணவெளி (அ)

# Children's Parliament (Bal Panchayat)

**Concept of Bal Panchayat**



Children's right to participation is firmly established in Article 12 of the United Nations Convention on the Rights of the Child. It ensures that a child may form his or her own views; express his or her opinion freely and have that opinion taken into account in any matter or procedure affecting the child. The National Plan of Action for Children 2005 further reaffirms child participation for affirmative actions towards actualizing child rights.

Children with their immense potential can contribute as partners in their own, families' and communities' health and development. However, they are seldom involved in matters concerning their health and development. The reason is they are considered to be naïve, inexperienced, unqualified and often at the family level there is ignorance and lack of willingness to involve and perceive children as agents of change. Effective programmes have to be initiated to encourage children's participation. Bal Panchayat is such a programme.

**Headmistress Mrs. Elangium. E shares the Bal Panchayat's impact on students' minds.** After being part of the BAL Panchayat, children are motivated and encouraged to improve their own hygiene and the cleanliness of their environment. The good students are taking remedial classes for the weaker students during their lunchbreak and free time. After being chosen as Ministers in the Bal Panchayat there is a lot of change in the behaviour and attitudes of the students. Rahul Karunakaran was a naughty boy who never listened to his parents or teachers and did not complete his homework. However, after becoming Home Minister there was a drastic change in him. He is much more disciplined and he completes his homework and other tasks given to him. He also won State level First Prize for High Jump and 400 m race. His parents have also noticed the change.

To elect the Bal Panchayat members, we decided to conduct an election in our school. 8 out of the 16 students who contested won the election and they formed the Bal panchayat. The Panchayat meets once a week. During these meetings, they take up action items to work on. Cleanliness was taken up in one such meeting. Students decided to clean the campus and the community and spread awareness of cleanliness among the community. Students decided that they wanted to repair the fans and tube lights in the school

as well. Since it is in its early stages, there is a greater involvement of the teachers to drive it.

**Some of the voices from the Bal Panchayat members, R Harini – Prime Minister.** 8th Std. Student, "after becoming a Prime Minister of Bal Panchayat I take interest in watching News on the TV which I never did before. This has made me aware of and sensitive to what is happening in the world around me. I am aware of Climate Change and water scarcity. I am worried that now we are buying water to drink what will happen to our generation and the next generations if we will not conserve water. During our morning assembly I make it a point to spread the concept of water and energy conservation amongst students".

**Gopika – Finance Minister. Student of 8th Std.** aspires to study BSc in Agriculture. She says- after the setting up of the Bal Panchayat there are many changes in the school. We have planted many herbal native plants and water and nurture them regularly. The school conducted many programmes to engage us of which my favourite is Food Festival, wherein 80 students presented organic nutritious food. This way we enhanced our learning about the nutritional value of different foods.

**J Valatha - Health and Environment Minister. Student of 8th Std.** "earlier I A Compost Pit for waste management has been developed in the school. Every Friday cleaning of the school happens and all the waste collected is put in the pit (which was burnt earlier) to produce manure for the plants. Valatha, along with his Science Teacher and a peer, has developed a portable organic waste cutting machine; all dried leaves are cut in this and added to the compost pit.

We conduct Bal Panchayat zealously. Whatever children shared here are some of their first hand experience as representatives of their school parliament. When they progress further we hope to see many students' voices representing not only their issues but also how to solve them together. I strongly feel that giving children responsibilities has brought about a positive change in their behaviour and personalities. The best change that has happened is that children volunteer for Swach Bharat campaigns and take ownership of their behaviour so as to be role models for other children.








**C. Sasikumar,** PST
GMS Manapet

# Exploring temples in and around Thanjavur – a field visit

**Objectives of the trip:**

The students will be able to

- Explore the places
- Know about the history of the places by getting the resources from the native people of those places
- Get direct exposure by seeing and touching the art and architectures
- Develop skills like observation, identification, application of skill in real life situations
- Develop co-operation, tolerance, sharing of knowledge, etc.

**Planning the trip**

After the staff meeting comprising the head teacher and all the other teachers, we decided on the places for our school education cum exposure visit. The following places were selected

- Gangai konda Cholapuram
- Swami malai
- Thiruvalanchuzhi
- Patteeswaram
- Tarasuram
- Thanjavur

Then the following sequence of activities were done as a preparation,

1. Permission application letter was sent to the office of DIS of Zone - V, Villianur
2. Video clipping was shared to explain about the history of the temples in Thanjavur, Tarasuram, Patteeswaram and Gangai konda cholapuram
3. A small group discussion was conducted and the following points were discussed:
   a. What is the purpose of the visit?
   b. History of the temples – year of establishment, rulers who built the temples
   c. Connecting the concept of visit to the curriculum- (Historical importance of the temples, comparison between the construction style in ancient and modern times)
   d. Responsibilities were shared among the teachers (Bus arrangements, safety needs, food, refreshment)

**During the visit**



On 18th February 2017, we started our journey from Government Primary school, Kalitheerthalkuppam at 5:30 am with 48 students along with 7 teachers under the guidance of our school's headmaster, Mr. Selva kumar. Students came with great enthusiasm. We reached Gangai Konda cholapuram at 08:30 am.

The history of the temple was briefly explained by the temple trustee and Gurukkul. Our school teacher Mrs V. Sowmia, PST, and Mr.Srinivasan, drawing teacher, also explained about the art, architecture and specialty of the temple. Students were then allowed to explore the site in complete freedom.

After breakfast, we started our journey and reached Swami malai at 10:30 am. Our children had a different experience in Swami malai. The height of the temple was a little higher when compared with the average temple in our chosen places. Children observed that the steps were built for the **27 Nakshatras,** saw the entire temple and heard the history of the temple from one of the persons in the locality.

Then we started the next stage of our journey and reached Thiruvalanchuzhi, where we saw the famous Lord Ganesha, called white Vinayaga, made with the ocean foam. It is an ancient temple. We saw many different sculptures there, especially chains made of stones. Our teachers helped our students to observe each and every sculpture and pillar there.

Then we reached Patteeswaram and explored the temple and its history with the help of the local people. The children learnt about the appearance of the temple, which was renovated recently and kumbabishegam done. The discussion was about the temple renovation and the kumbabishegam function.

Then we reached Tarasuram at 12 pm. We saw each and every corner of the temple. Our students received plenty of information from the sculptures in the temple. Isai padikkatugal – Musical steps, where a musical sound was heard from the stone steps. Animal sculptures were distinct, e.g. Elephant and cow in a single sculpture; horse, lion, elephant in a single sculpture. There we had a small discussion with the children about the exposure visit so far and how they were liking it. The children showed enthusiasm and claimed to be enjoying the trip. The discussion continued through lunch too. Lunch was provided and the children were allowed to play in the garden for half an hour. *"We, the teachers, were very proud of our children, because our children interacted with the foreigners in the temple who came from different countries (France, Germany, U.S and Canada) without any hesitation. Our children interacted with them in English. We were satisfied to see their knowledge of spoken English and how they use it in real life"*

Then we started our journey from Tarasuram at 2 pm and reached Thanjavur at 5 pm.





On seeing the magnificent architecture of the Thanjavur temple, our children were very delighted and shared their views with us joyfully. They had already read the details of Thanjavur in their textbook (Grade V-Tamil–Nenchai allum Thanjai Periyakovil). They had also discussed some of the significant features of the temple, like Vimanam made of a single stone (81 ton) sculpture of Dwarabalagar,etc.

There we had a short discussion with the children about the architecture and historical importance of Thanjavur temple.



- Difference and similarities between Gangai konda cholapuram and Thanjavur temple. (Height and construction style of Nandi, Lord Shiva):

**Difference:** children observed that the height of the Nandi in Gangai konda cholapuram is greater than that of the Nandi



in Thanjavur and the height of the Lingam at Thanjavur is greater than that of the Lingam in Gangai konda cholapuram,

**Similarities:** All the temples were built by the Chola Emperors and the construction style is the same throughout

We visited all the temples with complete satisfaction and enthusiasm.

Then we started our journey from Thanjavur at 6 p.m. and reached our school at 10.00 p.m. Attendance was taken and the students were sent safely home with their parents.

**Post visit**

- Students were assigned to submit a report about the visit either in written format or in the form of drawing. Students wrote their personal experiences and some also submitted the report in drawing forms
    - o The children expressed their happiness because they had seen, touched and felt in reality the sculptures they had read about in their Tamil textbook. (Nenchai allum Thanjai periya kovil)
    - o Children observed, expressing their astonishment, that in Thanjavur temple the shadow of the temple tower was not seen.



**Conclusion**

On the whole, the education-cum-exposure visit was an amazing and excellent experience for both the students and the teachers. We also had very different experiences. Our students had direct exposure and received a lot of joyful experience. During the visit they learnt skills like co-operation, tolerance and sharing (children

helped their friends who suffered from travel sickness; while moving from one place to another place they ensured each other's presence without expecting our assistance, and they shared their snacks with each other). We were satisfied that we had achieved the prime objective of the visit.





Student Artefacts



**B. Suganthi** PST,
GPS, KT Kuppam

# ஒரு தலைமை ஆசிரியரின் அனுபவ பகிர்வு

**தலைமை ஆசிரியர் என்பவர்:**

ஒரு தேருக்கு அச்சாணி என்பது மிகவும் முக்கியம். அச்சாணி சிறப்பாக இருந்தால்தான் தேர் சிறப்பாக செயல்படும். ஒரு பள்ளியானது மிகச்சிறந்த தேரினைப் போன்றது. தேருக்கு அச்சாணியானது பள்ளியின் தலைமை ஆசிரியர். அத் அத்தேரினை மிகவும் அழகுபடுத்தி செலுத்துவது அப்பள்ளியின் ஆசிரியர்களே ஆவர். எனவே ஒரு பள்ளியானது மிகச் சிறப்பாக செயல்பட வேண்டுமெனில் அப்பள்ளியின் தலைமை ஆசிரியரின் பணியானது மிகவும் சிறப்பாக இருக்கவேண்டும்.

**பள்ளியின் மதிப்பை உயர்த்துதல்:-**

பள்ளியானது மிகச்சிறப்பாக செயல்பட வேண்டு-மெனில் சமுதாயத்தின் பங்கு மிகமுக்கியமாகும். ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர் இதனை உணர்ந்து செயல்பட வேண்டும். உதாரணமாக நான் இருளன் சந்தையில் பள்ளி தலைமையாசிரியராக பொறுப்-பேர்க்கும் போது சமுதாயத்திற்கும் பள்ளிக்கும் ஓர் இணக்கமான சூழல் இல்லாமல் இருந்தது. நான் பொறுப்பேர்க்கச் சொல்லும் போதே என்னுடைய தோழர்கள் அவ்வூரில் கவனமாக பணிபுரியுங்கள் முடிந்தால் விரைவில் மாற்றல் ஆகி வேறு பள்ளிக்குச் சென்றுவிடுங்கள் என்று என்னை பயமுறுத்தி அனுப்பினார்கள். நான் பணியேற்றதும் முதன் முதலாக ஆசிரியர் கூட்டத்தைக் கூட்டும் பொழுது ஊர் மக்கள் பள்ளி ஆசிரியர்களை மதிப்பதில்லை, போதுமான வகுப்பறை வசதி இல்லை, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கழிப்பறை வசதி இல்லை என்று பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி கூறினார்கள்.

இப்பள்ளியில் முன்பு நடந்த சில விரும்பத்தகாத செயல்களால் பெற்றோர்களிடையே இப்பள்ளி நம்பகத்தன்மையினை இழந்து விட்டது என அறிந்தேன். ஏனெனில் இப்பள்ளியில் பதவியேற்ற ஓரிரு வாரங்களிலேயே சிறு காரணத்திற்காக ஊரேதிரண்டு வந்ததைக் கண்டேன். அதன் பிறகு அம்மக்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்று விளக்கிய பிறகு அமைதியாக திரும்பிச் சென்றனர்.

பின்னர் ஆசிரியர் கூட்டத்தினைக் கூட்டி ஆசிரியர்களிடம் மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனை நடத்தினேன். அதன் அடிப்படையில் ஆசிரியர்களுடன் இணைந்து கடுமையாக திட்டமிட்டு உழைத்தோம். முதல் முறையாக மாணவர்கள் அவ்வூரை விட்டு வெளிஉலகம் சென்றனர். குழந்தைகள் தினவிழா போட்டிகளில் பெரும்பான்மையான மாணவர்கள் கலந்துகொண்டனர். அப்போட்டிகளைக்காண பெற்றோர்களும் உடன் சென்றனர். பள்ளியைத்-தாண்டி மற்றோர் உலகம் இருக்கின்றது என்பதனை பெற்றோர்களே நேரில் அறிந்தனர். இதற்காக ஆசிரியர்கள் கடுமையாக உழைத்தனர் மாணவர்கள் போட்டிகளில் பல பரிசுகளை வென்றனர்.

அதன் பின் Rotary club of Midtown Pondi-cherry அவர்களின் உதவியுடன் பள்ளியில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மூன்று வகுப்பறைகளையும் சுமார் ரூபாய் 40000 அளவில் மூன்று வகுப்பறைகளும் புணரமைக்கப்பட்டு மாணவர்களை வகுப்பறை சூழலில் கல்வி கற்றனர்.

அதே போன்று மாணவர்களின் கழிப்பறை வசதிக்காக Rotary club of Midtown Pondicherry அவர்களின் உதவியுடன் சுமார் ரூபாய் 2,50,000 செலவில் புதுச்சேரி அரசுப்பள்ளிகளில் காண-இயலாத அளவிற்கு மிகச் சிறந்த கைகழுவும் தொட்டியுடன் கூடிய கழிப்பறைக் கட்டிடம் கட்டப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு அளித்தார்கள். இத்தகைய செயல்பாடுகள் எல்லாம்

பெற்றோர்களுக்கு பள்ளியின் மீது மரியாதை சிறிது சிறிதாக உயர்ந்தது.

மேலும் பள்ளி மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது கிழிந்த பையில் தங்களுடைய புத்தகங்களை எடுத்து வருவதுடன் சரியான அளவில் தைக்காத சீருடையுடன் பள்ளிக்கு வந்தனர் இந்நிலையில் அவர்களின் தோற்றத்தினையும் செயல்பாட்டையும் மாற்றும்பொருட்டு NGO உதவியுடன் மாணவர்களுக்கு School bag மற்றும் பெற்றோர்களின் ஒப்புதலுடன் சிறந்த தையல் கலைஞர்களைக் கொண்டு சீருடைகளை தைத்துக் கொடுத்தேன். இதனால் மாணவர்களின் தோற்றத்தில் சிறந்த மாற்றம் கொண்டுவரப்பட்டது.

**மாணவர்கள் கற்றலில் தலைமை ஆசிரியரின் பங்கு:-**

தலைமை ஆசிரியர் மாணவர்களின் கற்றலில் முக்கியப் பங்கு ஆற்றுகிறார். அவ்வப்போது வகுப்பறைக்குச் சென்று ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும் போது கவனித்து அவர்களுக்கு தக்க ஆலோசனைகள் கூறினேன். மேலும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தி அவர்களை ஊக்குவித்தேன்.

நவோதயா சிறப்பு வகுப்புகளில் முதல் முறையாக அனைத்து மாணவர்களையும் பங்கு பெறச் செய்து அனைத்து மாணவர்களையும் நுழைவுத்தேர்வு எழுதச்செய்தேன்.

வாரத்தின் இறுதி நாட்களில் மதியவேளையில் அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய பாடத்திற்கான கற்றல் துணைக்கருவிகள் தயார் செய்து வகுப்பறைக்குச் செல்லும் போது உரிய துணைக்கருவி கொண்டு பாடங்களைக் கற்பிக்கச் செய்தேன்.

மேலும் புதிதாக பணியில் சேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களிடையே வகுப்பறையில் ஆங்கிலத்தில் பேச முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் சிறு சிறு வார்த்தைகளை ஆங்கிலத்தில் பேச மாணவார்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும் எனக்கூறி அதனை செயல்படுத்தினோம். அதனுடன் மாணவர்களின் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் அளித்தோம் உணவு உண்பதற்கு முன் கைகளைக் கழுவுதல், வரிசையில் அமர்ந்து உண்ணுதல், கைகால்களை சுத்தமாக வைத்திருத்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தேன்.

மாணவர்கள் வெளி உலக அனுபவம் பெற வேண்டும் என்ற நோக்கில் மகாத்மாகாந்தி மருத்துவர்கள் உதவியுடன் பள்ளி வளாகத்திலேயே 'குழந்தைகள் தின விழா' கொண்டாடினோம். மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக விளையாட்டுப் பொருட்களை அளித்தனர். அன்று மாணவர்களிடையே அம் மருத்துவர்கள் பல்வேறு கருத்துக்களை வழங்கி சிறப்பித்தனர் குறிப்பாக கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், கடின முயற்சி குறித்தும், குழந்தைகளின் கனவு குறித்தும் உரையாடினர்.

இருளன்சந்தையில் இருளர்கள் என்ற சமூகத்தினர் தனியாக வசித்துவந்தனர் அவர்களின் குழந்தைகள் தொடர்வருகைப் புரிவதில்லை. அதன் காரணத்தினை ஆசிரியர்களிடம் கேட்டபொழுது அவர்கள் அவ்வப்போது கரும்பு வெட்டுவதற்கு வெளியூர் செல்வார்கள். அச்சமயத்தில் தங்கள் குழந்தைகளையும் உடன் அழைத்துச் சென்றுவிடுவர். மேலும் அங்கு பல குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமலும் உள்ளனர் என்று கூறினர். பின்னர் பள்ளி ஆசிரியர் உதவியுடன் அச்சமூகத்தின் தலைவரை சந்தித்தோம். அவரிடம் கல்வியின் முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் சலுகைகளையும் எடுத்துக் கூறினேன். பள்ளிக்கு வராத குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டினோம். அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி கூறினேன். அவரின் உதவியுடன் அச்சமூகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்ததுடன் அனைத்துக் குழந்தைகளும் தொடர்வருகைப் புரிந்தது என்பது மிகச் சிறந்த மைல்கல் சாதனையாகும்.

ஆசிரியர்களின் உதவியுடன் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடத்தி மாணவர்களை ஊக்குவித்ததுடன் அவர்களின் பெற்றோர்களையும் பார்வையிடச் செய்தோம் இதனால் பெற்றோர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்ததுடன் ஆசிரியர்களின் மீது மிகுந்த மரியாதையை வைத்தனர்.

பிரதமர் மோடி அவர்கள் அறிவித்த "தூய்மை இந்தியா" திட்டத்தினை மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் எடுத்துக்கூறினேன். அதன் அடிப்படையில் மாணவர்களின் ஊர்வலமும் நடத்தப்பட்டது. மறுநாள் முதல்முறையாக என்னிடம் பிரச்சனைக்காக வந்த பெற்றோர்களின் அளவை விட இருமடங்கு பெற்றோர்கள் பள்ளிக்கு வந்து தங்களால் இயன்ற அளவில் பள்ளி வளாகத்தினை சிறப்பாக தூய்மை செய்தனர் என்பது பெருமைக்குரிய தகவலாகும்.

இன்று அப்பள்ளியானது பெற்றோர்களின் மனதில் மணிமகுடமாய் இருக்கின்றது. மேலும் பள்ளித்துணை ஆய்வாளார் அவர்களால் மிகச்சிறந்த பள்ளியாக போற்றப்படுகிறது. ஆசிரியர்கள் போட்டிப்போட்டுக்கொண்டு மிகச் சிறப்பாக கல்வி கற்பிக்கின்றனர். மாணவர்களும் நன்கு கல்வி கற்கின்றனர்.

2016-17 ஆண்டு மாணவர்களின் சேர்க்கையும் அப்பள்ளியில் உயர்ந்தது என்பதனை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.










**ர. சிவகுமார்**, தொ.ப.ஆ,
அ.தொ.ப, கிருமாம்பாக்கம்

## மேடையில் திசைமானி - வருடாந்திர கல்வி மாநாடு

அரசு பள்ளி ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் தங்களுடைய கற்பித்தல் அனுபவங்களையும் பிரதிபலிப்புகளையும் பரந்து விரிந்து எங்கும் நிறைந்திருக்கும் கல்விச் சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதற்காக ஆண்டு தோறும் நடத்தப்படும் மாநாடு 'மேடையில் திசைமானி' என்பதாகும்.

### நாட்கள்

- வட்ட அளவில் எழுத்தாளர் பட்டறை - மார்ச் 2017 (1 நாள்)
- மேடையில் திசைமானி - இறுதி நிகழ்வு - ஏப்ரல் 2017 (3 நாட்கள்)

### பங்கேற்பாளர்கள்

புதுச்சேரி அரசு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கலாம்.

- முன்-மழலையார் பள்ளி ஆசிரியர்கள்
- நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்
- தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்
- தலைமை ஆசிரியர்கள்

### பகிர்தலுக்கான வடிவங்கள்

தங்களின் அனுபவங்களையும் பிரதிபலிப்புகளையும் ஆய்வுக் கட்டுரைகளாகத் தயாரிக்கலாம். அவை ஒளிப்பகிர்வுகளாகவோ (PPT), சுவரொட்டிகளாகவோ, நாடகங்கள் அல்லது குறும்படங்கள் வடிவிலோ இருக்கலாம். மேலும் தங்களின் ஆய்வுக் கட்டுரைகள் ஆண்டு மலரில் அச்சிடப்படும்.

### உங்களுக்காகச் சில மாதிரி தலைப்புகள்

#### கண்ணோட்டங்கள்

- பள்ளி மற்றும் சமூகம்
- நாம் ஏன் கற்பிக்கிறோம்?
- குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள்?
- கலைத்திட்டம் மற்றும் பாடநூல் பற்றிய விமர்சன ஆய்வு
- கல்விக் கொள்கைகள்

#### பொதுவான கற்றல்-கற்பித்தல் செயல்கள் (அனைத்துப் பாடங்களும்)

- கற்றலுக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்
- குழுவாகவும் சகமாணவரிடமிருந்தும் கற்கும் உத்தியைப் பயன்படுத்துதல்
- மதிப்பிடுதலும் குறைதீர்க்க உதவுதலும்
- வகுப்பறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
- சிறப்பு மாணவர்களுக்கும் கற்றலில் குறைபாடு உள்ளவர்களுக்கும் தனிகவனம் செலுத்துதல்
- செயல்திட்டம் சார்ந்த கற்றல்
- மாணவர் கற்றலில் ஆசிரியரின் பிரதிபலிப்பு
- கற்றல்-கற்பித்தல் கருவிகள்
- இப்பகுதியைச் சார்ந்த உங்களுக்குப் பிடித்த வேறு சில தலைப்புகள்

#### பள்ளித் தலைமை

- சிறந்த பள்ளி - ஒரு பார்வை
- ஆசிரியர் கற்றலும் ஒத்துழைப்பும்
- சிறந்த பள்ளி நிர்வாக அமைப்புகள்
- பள்ளிக் கலாச்சாரம்
- பெற்றோர் மற்றும் சமூகத்துடனான தொடர்பு

#### மொழி கற்பித்தல்

- குழந்தைகளின் சுதந்திரமான பேச்சையும் நடிப்பையும் மொழிக் கல்வியில் பயன்படுத்துதல்
- வாசிப்பு மூலைகளையும் மன்றங்களையும் அமைத்து அவற்றைச் செயல்படுத்துதல்
- கதைகூறல்
- எழுதும் திறனை வளர்த்தல்
- மொழி வகுப்பில் நற்பண்புகளை வளர்த்தல்
- ஆங்கிலம் பேசக் குழந்தைகளை ஊக்குவித்தல்
- இப்பகுதியைச் சார்ந்த உங்களுக்குப் பிடித்த வேறு சில தலைப்புகள்

#### அறிவியல் கற்பித்தல்

- வகுப்பறையில் நேரடியாக அறிவியல் சோதனைகளைச் செய்தல்
- வகுப்பறைக்கு வெளியே கற்றல்
- அறிவியல் கற்றலுக்குத் தடையாக இருக்கும் எழுத்தறிவு இடைவெளியைச் சரிசெய்தல்
- சுற்றுச்சூழல் மீது அக்கறை

#### கணித கற்பித்தல்

- நேரடி அனுபவங்களுக்கான செயல்பாடுகள்
- நிஜ வாழ்க்கையில் கணிதப் பயன்பாடு பற்றிய உரையாடல்
- கணித ஆய்வகங்கள்

#### சமூக அறிவியல் கற்பித்தல்

- பாடநூலைக் கடந்து உண்மையான ஆதாரங்களைப் பயன்படுத்துதல்
- வகுப்பறையில் உரையாடலை பயன்படுத்துதல்
- உண்மைகளுக்கு அப்பாற்பட்டு விமர்சன சிந்தனை திறன்களை வளர்த்தல்
- சமூக அறிவியல் மூலம் சமூக உணர்வுகளை வளர்த்தல்




## மேடையில் திசைமானி - வருடாந்திர கல்வி மாநாடு

அரசு பள்ளி ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் தங்களுடைய கற்பித்தல் அனுபவங்களையும் பிரதிபலிப்புகளையும் பரந்து விரிந்து எங்கும் நிறைந்திருக்கும் கல்விச் சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதற்காக ஆண்டு தோறும் நடத்தப்படும் மாநாடு 'மேடையில் திசைமானி' என்பதாகும்.

### நாட்கள்

- வட்ட அளவில் எழுத்தாளர் பட்டறை - மார்ச் 2017 (1 நாள்)
- மேடையில் திசைமானி - இறுதி நிகழ்வு - ஏப்ரல் 2017 (3 நாட்கள்)

### பங்கேற்பாளர்கள்

புதுச்சேரி அரசு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கலாம்.

- முன்-மழலையார் பள்ளி ஆசிரியர்கள்
- நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்
- தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்
- தலைமை ஆசிரியர்கள்

### பகிர்தலுக்கான வடிவங்கள்

தங்களின் அனுபவங்களையும் பிரதிபலிப்புகளையும் ஆய்வுக் கட்டுரைகளாகத் தயாரிக்கலாம். அவை ஒளிப்பகிர்வுகளாகவோ (PPT), சுவரொட்டிகளாகவோ, நாடகங்கள் அல்லது குறும்படங்கள் வடிவிலோ இருக்கலாம். மேலும் தங்களின் ஆய்வுக் கட்டுரைகள் ஆண்டு மலரில் அச்சிடப்படும்.

**AZIM PREMJI FOUNDATION**
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. to RTO Office
Puducherry - 605 004
Land Phone : 0413 - 2355085
www.azimpremjifoundationpuducherry.org
www.azimpremjifoundation.org

**Send us your articles and feedback :**
thisaimaani@azimpremjifoundation.org
8220001765
9500400446

MOTHER'S GRACE 0413 2336204